# மானியக் கோரிக்கை எண்.36

# திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

## முகவுரை

மாநிலத்தின் ஆண்டு திட்டங்கள் மற்றும் ஐந்தாண்டு திட்டங்களைத் தயாரித்தல் மாநிலத் திட்டச்செலவினங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், இருபது அம்சத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகிய திட்டங்களைக் கண்காணித்து ஆய்வு செய்தல் ஆகியவை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் முக்கியப் பொறுப்புகள் ஆகும். நிர்வாகத் துறைகளால் சுற்றனுப்பப்படும் வளர்ச்சி திட்டங்கள் குறித்த கோப்புகளை இத்துறை கூர்ந்தாய்வு செய்கின்றது. இந்த நோக்கத்திற்காக பல்வேறு அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்தும் மற்றும் நிர்வாகத்துறை என்ற முறையில் மாநிலத்திட்டக்குழு, பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகளின் வல்லுநர்களின் சிறப்புத் திறமைகளைப் பயன்படுத்திக் கொள்கிறது. இத்துறை, அரசு கொண்டுவரும் புதிய திட்டங்களுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு வேலைகளைச் செய்கிறது. இத்துறை, புவியியல் தகவலமைப்பு மூலம் மின் ஆளுமை திட்டம் மற்றும் சிறப்பு முயற்சிகள் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் உட்பட சிறந்த, புதுமையான பல்முனைத் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொள்கின்றது. துறையின் வலைத் தளமான *www.tn.gov.in/departments/pd.html-இல்*, இத்துறையின் செயல்பாடுகள் சம்பந்தமான பல்வேறு ஆவணங்களைக் கொண்டுள்ளது.

## 1.0 முக்கிய நடவடிக்கைகள்

i. ஐந்தாண்டுத் திட்டங்களையும் ஆண்டுத் திட்டங்களையும் தயாரிப்பதுடன் மத்திய திட்டக்குழுவுடன் இணைந்தும் செயல்படுதல்;

ii. தொலைநோக்குத் திட்டம் தயாரித்தல், ஐந்தாண்டுத் திட்டத்தின் இடைநிலை ஆய்வு செய்தல், வளர்ச்சிக் குறியீட்டை அளவிடுதல் மற்றும் பெரிய அளவிலான திட்டங்களை மதிப்பீடு செய்தல். மாநிலத்தின் இயற்கை வளங்களான நிலம் மற்றும் நீர் பயன்பாடு உட்பட முக்கிய திட்டங்களைத் தயாரித்து, செயல்படுத்துகின்ற திட்டங்களின் மீது மேற்பார்வை ஆய்வுகள் மேற்கொள்ளுதல்;

iii. திட்டப்பணிகள், இருபது அம்ச திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மத்திய மாநில அரசுகள் பகிர்ந்துகொள்ளும் திட்டங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தலும் கண்காணித்தலும்;

iv. பெரிய உள்கட்டமைப்பு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தலும் கண்காணித்தலும்;

v. தொலையுணர்வு புவியியல் தகவல் அமைப்புகளை உருவாக்கி பயன்படுத்துவதற்கு ஊக்கமளிப்பது போன்ற பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் முகமைகளை உள்ளடக்கிய சிறப்பு மற்றும் புதுமையானத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ஒருங்கிணைந்து செயல்படுதல்; கடந்த காலங்களில் அரசு செயல்பாடுகளை கணினிமயமாக்குவதிலும் உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தம் மற்றும் அதனால் மாநிலத்தில் ஏற்படும் தாக்கங்கள் குறித்த

மாநிலத்தின் அணுகுமுறையினை வகுப்பதிலும் துறை முக்கிய பங்கு வகித்தது;

vi. மாநில வருவாய் மதிப்பீடுகள், பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண் கணக்கெடுப்பு, சமூகப் பொருளாதார ஆய்வுகள், சிறப்பு ஆய்வுகள், மாநிலப் பொருளாதாரத்தின் மாதாந்திர அறிக்கைகள் ஆகியவை குறித்து பொது மற்றும் தனியார் துறைகளிலிருந்து புள்ளி விவரங்களை சேகரித்தல், தொகுத்தல், மற்றும் பரவச் செய்தல்;

vii. திட்டப்பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்தல்;

viii. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற சிறப்பு அல்லது புதிய திட்டங்களை உருவாக்குதலும் செயல்படுத்துதலும்;

ix. மாநிலத் திட்டக்குழு, பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகள் செயல் படுவதற்கான வசதிகள் செய்தல்; மற்றும்

x. சிறப்பு முயற்சிகள் பிரிவின் கீழ் ‘மெட்ரோ இரயில்’ திட்டத்தினை செயல்படுத்துதல்.

## 2.0 துறையின் செயல்பாடுகள் பற்றிய குறிப்பு

துறையின் செயல்பாடுகள் ஒவ்வொன்றின் தன்மை பற்றியும் தகுதிநிலை பற்றியும் கீழே சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது.

## 2.1 ஐந்தாண்டுத் திட்டங்களின் ஒதுக்கீட்டில் சீரான வளர்ச்சி

மாநில அரசின் திட்டச் செலவினங்கள் திட்ட ஒதுக்கீடுகளைவிட சீராக அதிகரித்து அதிக வளர்ச்சி விகிதங்களை ஊக்குவிக்கும் விதமாக உள்ளது. இவை ஒவ்வொரு ஐந்தாண்டு காலத்திற்கும் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடுகள் ஏறக்குறைய இரண்டு மடங்கு உயர்வதற்கு உதவியாக அமைந்துள்ளது என்பதை கீழ்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது:-

*(ரூபாய் கோடியில்)*

| திட்டம் | ஆண்டுகள் | ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு | செலவினம் |
|---|---|---|---|
| முதலாவது திட்டம் | 1951–1956 | 86 | 80 |
| இரண்டாவது திட்டம் | 1956–1961 | 186 | 188 |
| மூன்றாவது திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டங்கள் | 1961–1969 | 608 | 613 |
| நான்காவது திட்டம் | 1969–1974 | 552 | 559 |
| ஐந்தாவது திட்டம் | 1974–1979 | 1,122 | 1,165 |
| ஆறாவது திட்டம் | 1980–1985 | 3,150 | 3,645 |
| ஏழாவது திட்டம் | 1985–1990 | 5,750 | 6,317 |
| ஆண்டுத் திட்டம் | 1990–1991 | 1,450 | 1,591 |
| ஆண்டுத் திட்டம் | 1991–1992 | 1,600 | 1,726 |
| எட்டாவது திட்டம் | 1992–1997 | 10,200 | 14,024 |
| ஒன்பதாவது திட்டம் | 1997–2002 | 25,000 | 25,036 |
| பத்தாவது திட்டம் | 2002–2007 | 40,000 | 43,568 |

## 2.2 பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் (2007–2012)

பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் மார்ச் 2012 வரை, பத்தாவது திட்ட ஒதுக்கீட்டின் அளவினை விட 113 சதவீதம் அதிகரித்து, ரூபாய் 85,344 கோடி ஒதுக்கீட்டிளவிற்கு சாதனையை எய்தியுள்ளது. பதினோராவது திட்டம் (2007–2012), மாநில பொருளாதாரத்தின் சராசரியான வருடாந்திர வளர்ச்சி விகிதம் 9 சதவீதத்தை அடைவதற்கான நோக்கம் கொண்டுள்ளது.

### 2.2.1 2007–2012 ஆண்டுகளில் ஆண்டுத் திட்டங்களின் ஒதுக்கீடுகளும் செலவினங்களும்

*(ரூபாய் கோடியில்)*

| ஆண்டுகள் | ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு | செலவினம் |
|---|---|---|
| 11வது ஐந்தாண்டுத் திட்டம் (2007–2012) | 85,344 | – |
| 2007–2008 | 14,000 | 14,224 |
| 2008–2009 | 16,000 | 16,275 |
| 2009–2010 | 17,500 | 17,834 |
| 2010–2011 | 20,068 | 20,465 |
| 2011–2012 | 23,535 | – |

பதினோராவது திட்டக் காலத்தில் செலவினமானது ஒவ்வொரு ஆண்டும் ஒப்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டினை விட அதிகரித்துள்ளது என்பதனை மேலே உள்ள அட்டவணையில் காணலாம். எனினும், முக்கிய துறைகளான மின்சாரம், தொழில் மற்றும் விவசாயத்தின் வளர்ச்சி குறைந்த போதிலும், சேவைத் துறையில் அதிக வளர்ச்சி அடைந்துள்ளதால்

2007-2012 ஆம் ஆண்டுகளில் மாநில பொருளாதாரத்தின் சராசரியான வருடாந்திர வளர்ச்சி விகிதம் 8.3 சதவீதத்தை அடைவதற்கு உதவும் என கணக்கிடப்பட்டுள்ளது.

## 2.2.2 2012–2013 ஆம் ஆண்டுத் திட்டம்

ஆண்டுத் திட்டம் 2012–2013, பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (2012–17) முதல் ஆண்டாகும். ஆண்டுத் திட்டம் 2012–13ன் திட்ட ஒதுக்கீடு, 28,000 கோடி ரூபாயாக நிர்ணயிக்க கருதப்பட்டுள்ளது. அதற்கான திட்டப்பணிகள், கூறுகள் மற்றும் திட்ட அளவு புது டெல்லியில், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் ஆகியோரிடையே நடைபெறும் கூட்டத்தில் இறுதி செய்யப்படும்.

## 2.2.3 பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் 2012–2017

மாநிலத்தின் பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தினை உருவாக்குவதற்கான நடவடிக்கைகைகள் இத்துறை மூலம் தொடங்கப்பட்டு இதற்கான பணிகள் மாநிலத் திட்ட குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் நோக்கங்களையும் முன்னுரிமைகளையும் முழுமையாக பிரதிபலிக்கும் விதமாக, மத்திய திட்டக் குழுவால் உருவாக்கப்பட்டுள்ள வழிகாட்டும் குழுக்கள் மற்றும் பணிக்குழுக்கள் அல்லது துணைக் குழுக்கள் ஆகியவற்றில் பல்வேறு செயலர்கள், துறைத் தலைவர்கள் கலந்து கொள்வதை உறுதி செய்வதற்கு இத்துறை ஒருங்கிணைப்புத் துறையாக செயல்படுகிறது. மாநிலத்தின் பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தினை உருவாக்கும் போது, மத்திய

அரசின் வழிகாட்டுதல்களும் திட்ட முன்னுரிமைகளும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. 12வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு இலட்சிய இலக்காக ரூ.2.00 இலட்சம் கோடி என மாநில திட்டக் குழுவின் வரைவு ஆவணத்தில் முன்னுரைக்கப்பட்டுள்ளது. இது பதினோராம் ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூபாய் 85,344 கோடியினை விட 2.34 மடங்கு அதிகமாகும்.

## 2.3 திட்டச் செலவினங்கள் குறித்து ஆய்வு

திட்டப் பணிகள், மத்திய அரசு உதவிபெறும் திட்டங்கள் ஆகியவற்றின் செலவினங்களும் இருபது அம்சத் திட்டம் போன்ற தொகுப்பு திட்டச் செலவினங்களின் முன்னேற்றம் முறையாக கண்காணிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது.

### 2.3.1 திட்டப் பணிகள் குறித்து ஆய்வு

ஒவ்வொரு மாதமும் ஆண்டுத் திட்டத்தின் கீழ் திட்டச் செலவினங்கள் குறித்த விவரங்கள் தலைமைச் செயலகத்தின் சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து பெறப்பட்டு, நித ஆண்டு முடிவடைவதற்கு முன்பாக திட்டச் செலவுகள் யாவும் முழுமையாக எய்தப்படுவதினை உறுதி செய்வதற்காக, தலைமைச் செயலாளர் அவர்களால் ஆய்வு செய்யப்படுகிறது.

### 2.3.2 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களையும் மத்திய மாநில அரசுகள் பங்கிட்டுக் கொள்ளும் திட்டங்களையும் ஆய்வு செய்தல்

மத்திய அரசின் முழுமையான அல்லது பகுதி பங்களிப்புடன் மாநில அரசின் சொந்த நிதி அல்லது கடன் பங்களிப்புடன் கூடிய மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மாநிலத்தின் பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசின் பங்களிப்பிற்கான புதிய நிபந்தனைகளை கருத்தில் கொண்டு, இத்திட்டத்தினை தொடர்ச்சியாகக் கண்காணிக்கும் நடைமுறை மீண்டும் செயல்படுத்தப்படும்.

### 2.3.3 இருபது அம்சத் திட்டம் 2006–ன் ஆய்வு

இருபது அம்சத் திட்டமானது வறுமை ஒழிப்புக்கான தொகுப்பு திட்ட நடவடிக்கையாக, 1975ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 1982, 1986, மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்டு 2006ஆம் ஆண்டில் “இருபது அம்சத்திட்டம் 2006“ எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

வறுமையை ஒழிப்பு, ஏழைகள் மற்றும் அடித்தட்டு மக்களின் ஏழ்மை மற்றும் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம், வருவாய் இழப்பினை ஈடுகட்டுதல், வேலை வாய்ப்பினை பெருக்குதல், கல்வி, வீட்டு வசதி, சுகாதாரம், வேளாண்மை, நிலச் சீர்திருத்தம், நீர்ப்பாசனம், குடிநீர், நலிந்த

பிரிவினருக்கு அதிகாரமளித்தல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு போன்ற குறிப்பிடத்தக்க அம்சங்களை கொண்டதாகும்.

இருபது அம்சத் திட்டம்–2006 குறித்த மாநில அளவிலான ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் கடந்த 09.12.2011 அன்று அரசுத் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துறைகள்/நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இலக்கு நிர்ணயிக்கப்பட்ட இனங்களின் (Monitorable Items) செயல்பாடுகள் குறித்து ஒவ்வொரு மாதமும் இத்துறையினால் ஆய்வு செய்யப்பட்டு, மாதாந்திர முன்னேற்ற அறிக்கை மத்திய அரசின் புள்ளிஇயல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

## 2.4 பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களை கண்காணித்து ஆய்வு செய்தல்

ரூபாய் 100 கோடிக்கு மேற்பட்ட மதிப்பீட்டிலான பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களின் முன்னேற்றத்தை திட்டம் மற்றும் வளர்ச்சித்துறையினால் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்ட அலுவலர்கள் குழு ஆய்வு செய்து கண்காணிக்கிறது. இந்நோக்கத்திற்காக பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்கள் பின்வரும் நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது: i) எரிசக்தி, தொழில் மற்றும் தகவல் தொழில் நுட்பம், ii) நெடுஞ்சாலைத்துறை, மற்றும் சிறு துறைமுகங்கள், iii) சென்னை பெருநகருக்கான உள்கட்டமைப்புத் திட்டங்கள்

மற்றும் iv) இதர நகர உள்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் குடிநீர் திட்டங்கள்.

உயர்மட்ட அலுவலர்கள் குழு மேற்கண்ட திட்டங்களின் முன்னேற்றத்தை ஆய்வு செய்து, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் பணிகளை நிறைவேற்றுவதில் உள்ள முட்டுக் கட்டைகளைக் கண்டறிந்து, துறைகளுக்கிடையேத் தேவைப்படும் ஒத்துழைப்பு உட்பட இது போன்றப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளைப்பற்றி ஆலோசனைகளை வழங்குகிறது.

## 2.5 புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு

புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு செயல்பாடுகளை அனைத்து அரசு துறைகளிலும் ஒருங்கிணைத்து சீரிய முறையில் செயல்படுத்த அரசாணை (நிலை) எண்.19, திட்டம் மற்றும் வளர்ச்சி துறை, நாள் 15.02.1984–ல் மாநில அளவிலான ஒருங்கிணைப்பு குழு ஒன்றினை அரசு உருவாக்கியது. இதனை தொடர்ந்து, 2009–ம் ஆண்டு மாநிலத்தில் புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு முறையை செயல்படுத்த தகவல் தொழில்நுட்ப துறை முனைப்பு துறையாக தெரிவு செய்யப்பட்டது. அனைத்து தொலையுணர்வு விவரங்கள் மற்றும் அடிப்படை பகுப்பாய்வு வரைபடங்களை ஒரு மத்தியத் தொகுப்பாக அதனைப் பராமரிக்கும் பணிகள் தமிழ்நாடு புவியியல் தகவல் அமைப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மின்ஆளுகை முகமையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் அனைத்து துறைகளுக்கும் தேவையான விவர அடுக்குகளை தயாரிப்பதற்குத் தேவைப்படும் விவரங்களை

பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்விவரங்களில் சில மத்திய தொகுப்பிலும் இருக்கலாம்.

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் கூடுதல் தலைமை செயலர் அவர்கள் தலைமையில் 10.01.2012 அன்று நடைபெற்ற புவியியல் தகவல் அமைப்பு/ தொலையுணர்வு அமைப்புக்கான மாநில ஒருங்கிணைப்பு குழு கூட்டம் இப்பணியினை செயல்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஆய்வு செய்தது. பல்வேறு துறைகளிடையே ஒருங்கிணைப்பினை கண்காணித்திடவும், விவரங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல் குறித்து முடிவு எடுப்பதற்கு ஒரு புவியியல் தகவல் அமைப்பு/தொலையுணர்வு குழுவினை அமைத்திட முடிவு செய்யப்பட்டது. தேவைக்கேற்ப, தேசிய தகவலியல் மையம், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழக தொலையுணர்வு மையங்களின் உதவியுடன் சென்னை மற்றும் மாவட்ட தலைமையிடங்களில் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

## 2.6 புள்ளிவிவர தகவல் சேகரிப்பு, தொகுப்பு மற்றும் பரப்புதல்

இத்துறை மாநிலம் சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள் மற்றும் அதன் பொருளாதாரம் ஆகியவைகளை வழங்குவதில் ஓர் ஒருங்கிணைப்பு மையமாக உள்ளது. அத்தகைய விவரங்கள் அரசுத் துறைகளில் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை ஆதாரங்களிலிருந்தும் மற்றும் தனியார் துறைகளிடமிருந்தும் சேகரித்து தொகுக்கப்படுகின்றன.

## 2.6.1 துறைக்குள்ளான தகவல் வழங்கல்

துறைகளுக்குத் தேவைப்படும் அனைத்துப் புள்ளி விவரங்களும் இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் மூலமாக பெறப்படுகின்றது. இத்துடன் நாட்டின் ஏனைய மாநிலங்களின் புள்ளி விவரங்களை, நமது மாநிலத்தின் தொடர்புடைய செயல்பாடுகளின் புள்ளி விவரங்களோடு ஒப்பு நோக்குவதற்கும் இத்துறை தகவல்களைச் சேகரிக்கிறது.

## 2.6.2 பொருளாதார தகவல் சேவை

அரசாணை(வாலாயம்)எண்.201, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 30.08.2011 மூலம் அரசு ரூ,5,85,969/—ஐ ஆண்டு கட்டணமாக இந்திய பொருளாதார ஆய்வு நிறுவனத்திற்கு வழங்கி பின்வரும் சேவைகளை ஓராண்டிற்கு (செப்டம்பர் 2011 முதல் ஆகஸ்ட் 2012 வரை) பெற வகை செய்யப்பட்டுள்ளது. அவையாவன, பொருள்இயல் புலனாய்வு சேவை (முழுமை); தொழில் பகுப்பாய்வு சேவை; பிராவஸ் (Prowess) பல்முனை சேவை; மாநில பகுப்பாய்வு சேவை; மற்றும் “கேபெக்ஸ்.சிஎம்ஐஇ.காம்” (Capex.Cmie.com).

மேற்கண்ட சேவைகளை அனைத்துதுறைகளும் பயன்படுத்தி கொண்டாலும் பின்வரும் துறைகள் தங்கள் திட்டம் மற்றும் கொள்கை முடிவுகள் எடுப்பதற்காக, அதிகமாக பயன்படுத்துகின்றன. மாநில திட்டக் குழு; பொருளியல் மற்றும் புள்ளி இயல் துறை; மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை; வேளாண் துறை; தொழில் மற்றும் வணிகத் துறை; சர்க்கரை இயக்குநரகம்;

வணிகவரித்துறை; எரிசக்தி துறை; நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள்; மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை.

## 2.7 பெருந் திட்டங்கள் மற்றும் பணிகளை மதிப்பீடு செய்தல்

பல்வேறு அரசுத் துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை மதிப்பீடு செய்து அத்திட்டங்களின் பயன்கள் இலக்கு மக்களை உண்மையில் சென்றடைந்ததை உறுதி செய்வது இத்துறையின் முக்கியமான பணியாகும். மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை இயக்குநரகம் மூலம் திட்டங்களின் செயல்பாடுகளை உடனுக்குடனும், திட்டங்கள் முடிக்கப்பட்ட பின்னரும் மதிப்பீடு செய்யப்படுகிறது. திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையில் உள்ள குழுவின் ஒப்புதலைப் பெற்று மதிப்பீடு செய்யும் பணி இயக்குநரால் மேற்கொள்ளப்படும். இயக்குநர், திட்டம் மற்றும் வளர்ச்சி துறை மற்றும் பிற துறைகளுடன் மாநில திட்டக் குழுவினையும் கலந்து மதிப்பீட்டிற்கான திட்டங்களை தேர்வு செய்கிறார். அத்துறைகளுடன் கலந்து செயல்முறை மற்றும் எடுக்கவேண்டிய வழிமுறைகளை இறுதி செய்கிறார். மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறைக்கு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஆலோசகர்களின் ஆலோசனைகளைப் பெறுவதற்கும்; ஆராய்ச்சி உதவியாளர்களை பணியமர்த்திக் கொள்ளவும்; மதிப்பார்ந்த நிறுவனங்கள் மூலம் மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கும் பகுதி-II திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளின் வெளியீடுகள் களப்பணி விவர சேகரிப்புகளின் முடிவுகள் முறையான பகுப்பாய்வு மற்றும் திட்டங்களை செயல்படுத்தும் துறைகள் திட்டங்களை சரிசெய்வதற்கும் கொள்கைகளை

மாற்றுவதற்கும் ஆலோசனை வழங்கவும் ஆவணங்களாக வெளியிடப்படுகின்றன. இந்த ஆய்வறிக்கைகள் *www.tn.gov.in/dear/index.htm* என்ற அரசின் இணைய தளத்திலும் வெளியிடப்படுகின்றன.

## 2.8 சிறப்புத் திட்டங்கள், திட்டப்பணிகளைச் செயல்படுத்துதல்

1975–முதல், தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களிடையே பெரிய வனப்பகுதிகளை எல்லைகளாகக் கொண்டு மேற்குத் தொடர்ச்சிமலைப் பகுதியின் மேலும் வடக்கு வரை நீண்டு செல்லும் ஒப்பற்ற உயிரினச் சூழல்களை பாதுகாக்கும் நோக்கத்தோடு, மத்திய நிதியுதவிப்பெறும் திட்டங்களை இத்துறை செயல்படுத்திவருகிறது. நீலகிரி மாவட்டத்தை மையமாகக் கொண்டு கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களை எல்லைகளாகக் கொண்டு செயல்படுத்தப்படும் திட்டம் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டமாக தனியே வகைப்படுத்தப்பட்டும், தென்பகுதியில் உள்ள ஏனைய மலைத்தொடர்கள், மேற்குமலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும் உள்ளது. இவ்விரு திட்டங்களின் நிதியுதவியினை புதுப்பிப்பது குறித்து பன்னிரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டங்களின் முதலீட்டினை கணிசமான அளவு உயர்த்தி மேலும் தொடரவும் அரசு வலியுறுத்தியுள்ளது.

### 2.8.1 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், நீலகிரி மாவட்டத்தில் 1975ம் ஆண்டு முதல் மத்திய அரசின்

திட்டக்குழுவின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. மலைப்பகுதியின் உயிரின பன்மயத்தினைப் பேணுதல், பாதுகாத்தல், அதனை மேலும் வளப்படுத்துதல் ஆகிய மாநில அரசின் முயற்சிகளுக்கு துணை நிற்கும் நோக்கத்தோடு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள், இயற்கைச் சூழலைப் பேணுவதும், இயற்கைச் சூழலை மீளச்செய்வதும் ஆகும். இதன் அடிப்படையில் உயிரின பன்மயத்தினைப் பேணவும், மலைவாழ் உயிரினங்களை பாதுகாத்து மலைப்பகுதியின் உயிரினச் சூழலுக்கு புத்துயிர் ஊட்டுவது போன்றவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து அதனடிப்படையில் அனைத்து வளர்ச்சிப்பணிகளும் திட்டமிடப்படுகின்றன. மத்திய திட்டக்குழுவின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு திட்டங்கள் தயாரிக்கப் படுகின்றன. இதற்கென நீலகிரி மாவட்டம் முழுவதும் 75 பெரிய நீர்வடிப் பகுதிகளாக பகுக்கப்பட்டு, இவற்றில் 37 நீர்வடிபகுதிகளை மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்த்து, படிப்படியாக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இந்த திட்டத்தில் வடிகால்களை சுத்திகரித்தல், நிலச்சரிவினைத் தடுத்தல் மற்றும் உழுவதற்கு ஏற்ற நிலங்களில் சுற்றுப்புற சூழலுக்கேற்ற வேளாண்மை உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு நிலத்தின் ஈரப்பதத்தை தக்கவைப்பது ஆகியன மூலம் குறு நீர்வடிபகுதிகள் மேம்படுத்தப்படுகின்றன. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 33 பெரிய நீர்வடிப்பகுதிகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஆனால், ஆண்டுதோறும் குறைந்த அளவிலான நிதி ஒப்பளிப்பு அளிக்கப்படுவதால்

இம்மலைப்பகுதியின் வளர்ச்சி முழுமையான அளவினை எட்டவில்லை.

இந்த திட்டங்களுக்காக மத்திய திட்டக்குழுவின் சிறப்பு மத்திய நிதி உதவியின் கீழ் ஆண்டு ஒதுக்கீடு ஆரம்பத்தில் முழுவதும் மானியமாக அளிக்கப்பட்டு 2005–2006ஆம் ஆண்டு முதல் 90 சதவிகிதம் மானியமாகவும் நடைமுறைத்தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அதனை இரண்டு தவணைகளாக வழங்கி வருகிறது. கடன் பகுதி நிதிக்காக வெளிச்சந்தையில் கடன் பெறுவதற்கு மாநில அரசுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. 2009–2010ஆம் ஆண்டுத்திட்டம் முதல் கடன் பங்கு, மாநில அரசின் பங்காக கருதப்படுகிறது.

### 2.8.1.1 உழவர் தொகுதிகள் அமைத்தல்

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் உழவர்கள் மற்றும் நிலமற்றோர்களது நிலைத்த வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கத்தோடு அரசாணை(நிலை)எண்.51, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள்(தொ.நு.2) துறை, நாள் 29.02.2012–ல் உழவர் தொகுதிகளை அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த உழவர் தொகுதிகள் மற்றும் ஆலோசனைக்குழு அமைக்கும் திட்டமானது நிலமற்றோர் மற்றும் மகளிருக்கான தொடர்புடைய பிரிவுகளில் வாழ்வாதார வாய்ப்புக்களை உருவாக்க உழவர்கள் கூட்டாக இணைந்து செயல்படுவதை உறுதி செய்யும். இந்தத்திட்டமானது கூட்டுமுயற்சியில் உள்ளீடுகள் மற்றும் வேளாண் கருவிகள் வாங்குதல், இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்துதல், தாங்கள் கற்றுக் கொண்டவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல்,

மற்றும் சந்தைப்படுத்தல் ஆகிய கூட்டு முயற்சிகளை ஊக்கப்படுத்துகிறது. வேளாண் மற்றும் கால்நடை அறிவியலாளர்களிடையே தொழில்நுட்பங்களை பகிர்ந்து கொள்ள நிறுவன ரீதியாக உதவும் வகையில் இதர அரசு துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்தல் இத்திட்டத்தின் கூடுதல் சிறப்பாகும்.

### 2.8.1.2 2011–2012ஆம் ஆண்டின் செயல்பாடு

பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் திட்டங்களை செயல்படுத்த 2011–2012ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூபாய் 47.19 கோடியாகும். இந்த முழு ஒதுக்கீட்டிற்கும் ஒப்பளிப்புகள் வழங்கப் பட்டுவிட்டன. மேற்படி நிதி ஒதுக்கீட்டில், பெருமளவு அல்லது குறிப்பிடும் அளவு ஒதுக்க மண்வளப் பாதுகாப்பு, காடுவளர்ப்பு, தோட்டக்கலை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், நகர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள்மேம்பாடு, சாலைகள், சுற்றுலா மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகிய துறைகள் பெற்றுள்ளது. திட்டங்கள் செயல்படுத்துவதில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில், செயல்படுத்தப்பட்ட பணிகளை எண் அடிப்டையிலான படங்களாக ஆவணப் படுத்துதலும் செயற்கைகோள் வரைபடம் மூலம் திட்டம் செயல்படுத்தப்பட்ட இடத்தை குறியீடு செய்வது போன்றவைகள் ஆகும்.

### 2.8.1.3 2012–2013 ஆம் ஆண்டிற்கான திட்டச் செயற்குறிப்பு

மாநில அரசின் செயல்பாட்டினைக் கருத்தில் கொண்டு, மத்திய திட்டக்குழுவானது 2012–2013ஆம்

ஆண்டு திட்டத்திற்கு ரூபாய் 47.34 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்கான, வரைவு ஆண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த வரைவு ஆண்டுத்திட்டம், ஏற்கனவே செயல்படுத்தப்படும் துறைகளுக்கு முன்னுரிமை அளிப்பதோடு, சமுதாய ஈடுபாடு, உழவர்கள் ஒருங்கிணைந்து செயல்படுதல், ஊரக வாழ்வாதார முன்னேற்றத்திற்கான புதுமையான திட்டங்கள் மற்றும் மிகவும் மென்மையான பழங்குடி மக்களின் பண்பாட்டினை சீர்மைப்படுத்துவது போன்றவைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கும்.

### 2.8.2 மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாட்டில் 1975–76ல் தொடங்கப்பட்டு மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டத்தில் உள்ளது போல் மத்திய அரசின் திட்டக்குழு நிதியுதவியுடன் ( 90 சதவிகிதம் மானியம் மற்றும் 10 சதவிகிதம் கடன் ) செயல்படுத்தப்பட்டு வந்தது. ஆண்டுத்திட்டம் 2009–2010 முதல் 90 சதவிகிதம் மத்திய அரசின் மானியமாகவும் 10 சதவிகிதம் மாநில அரசின் பங்காகவும் நிதியுதவி அளிக்கும் முறைமை மாற்றப் பட்டுள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுப் பகுதியானது, தமிழ்நாட்டில் 26,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் உள்ளது. இது தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவில் 20 சதவிகிதமாகும். இத்திட்டம் தற்பொழுது, தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில் உள்ள 60 வட்டாரங்களைக் கொண்ட 33 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த எட்டு மாவட்டங்களில் தேனி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இத்

திட்டம் முழுமையாகவும் மீதமுள்ள ஆறு மாவட்டங்களில் பகுதியாகவும் செயல்படுத்தப்படுகிறது.

இத் திட்ட செயலாக்கத்திற்காகத் தனியே துறையில்லாத நிலையில், ஒரு முன்னோடி அடிப்படையில் **2010–2011** ஆண்டில் மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் இத்திட்டத்தின் செயல்பாடுகள் தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையிடம் (TAWDEVA) ஒப்படைக்கப்பட்டது. 2012-2013 ஆம் ஆண்டுக்கு கூடுதலாக விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இரண்டு மாவட்டங்களில் இத்திட்டத்தின் செயலாக்கம் இந்த முகமையிடம் ஒப்படைக்கப்பட உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை இல்லாத நிலையில் இப்பணிகள் கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் வாயிலாக செயல்படுத்தப்பட உள்ளது. மேலும் திருப்பூர் மற்றும் கோயமுத்தூர் மாவட்டங்களில் திட்ட செயலாக்கத்தினை ஒப்படைக்கும் வரையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றல் குறித்த பணிகளோடு முக்கிய செயல்பாடுகளில் ஒத்துழைக்கவும் தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை (TAWDEVA) கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:–

(i) உயிரினப் பாதுகாப்பிற்கு இயற்கைச் சூழலின் சமநிலையை பேணுதல்;

(ii) மரபணு பன்மயத்தினை பாதுகாத்தல்;

(iii) மனித இனத்தால் இயற்கைச் சூழலுக்கு ஏற்படுகின்ற சீரழிவுகளை மீளச் செய்தல்;

(iv) இப்பகுதியில் உள்ள மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களுக்கு, சுற்றுச் சூழல் சீர்கேட்டினால் ஏற்படும் அளவிட முடியாத பேராபத்து பற்றி புரியவைத்து சுற்றுச் சூழல் மேம்பாட்டிற்கான திட்டங்களில் அவர்களை தீவிரமாக பங்கு கொள்ளச் செய்தல்.

இத்திட்டத்தில் மண்வளப்பாதுகாப்பு, வனம், தோட்டக்கலை, விவசாயம், ஆதி திராவிடர் நலன், பழங்குடியினர் நலன், சாலைகள், சுற்றுலா, கால்நடை பராமரிப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள், மீன்வளம், சிறு பாசனம், பேரூராட்சிகள் மற்றும் பட்டு வளர்ப்பு ஆகியன திட்டப்பணிகள் செயல்படுத்தப்படும் முக்கிய பகுதிகளாகும். ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காக 166 நீர்ப்பிடிப்பு பகுதிகள் கண்டறியப்பட்டு இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

### 2.8.2.1 உழவர் தொகுதிகள் அமைத்தல்

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் உழவர்கள் மற்றும் நிலமற்றோர்களது நிலைத்த வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கத்தோடு அரசாணை (நிலை) எண். 51, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 29.02.2012–ல் உழவர் தொகுதிகளை அமைக்க ஆணைகள்

வெளியிடப்பட்டுள்ளன. இந்த உழவர் தொகுதிகள் மற்றும் ஆலோசனைக்குழு அமைக்கும் திட்டமானது நிலமற்றோர் மற்றும் மகளிருக்கான தொடர்புடைய பிரிவுகளில் வாழ்வாதார வாய்ப்புக்களை உருவாக்க உழவர்கள் கூட்டாக இணைந்து செயல்படுவதை உறுதி செய்யும். இந்தத் திட்டமானது கூட்டுமுயற்சியில் உள்ளீடுகள் மற்றும் வேளாண் கருவிகள் வாங்குதல், இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்துதல், தாங்கள் கற்றுக் கொண்டவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகிய கூட்டு முயற்சிகளை ஊக்கப்படுத்துகிறது. வேளாண் மற்றும் கால்நடை அறிவியலாளர்களிடையே தொழில்நுட்பங்களை பகிர்ந்துகொள்ள நிறுவன ரீதியாக உதவும் வகையில் இதர அரசு துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்தல் இத்திட்டத்தின் கூடுதல் சிறப்பாகும்.

### 2.8.2.2 2011–2012 மற்றும் 2012–2013ல் திட்ட ஒதுக்கீடு

2011–2012ஆம் ஆண்டுத்திட்டத்திற்கு மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்த மத்திய அரசின் திட்டக்குழு ரூபாய் 22.77 கோடிக்கு ஒப்புதல் அளித்திருந்தது. திட்டச்செயல்பாட்டினை கருத்தில் கொண்டு, மத்திய திட்டக்குழுவானது 2012–2013ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு ரூ.22.84 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்கான வரைவு ஆண்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் முன்புள்ள முன்னுரிமை பணிகளோடு உழவர் தொகுதிகள், கால்நடை பராமரிப்பு ஆகியவைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து செயல்படுத்தப்படும்.

## 2.9 சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள்

திட்டம் மற்றும் வளர்ச்சித் (WTO) துறையின், 29.04.2003 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 31–இல் சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்களை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஒருபகுதியாக இணைத்து துறையினை விரிவாக்க அரசு முடிவெடுத்தது. பல்வகை ஆதாரங்களிலிருந்து உருவாகி அரசின் முன்னுரிமையைப் பெறும் புத்தாக்கத் திட்டங்களைப் பற்றி ஆராய்வது இத்துறையின் நோக்கமாகும். சம்பந்தப்பட்ட நிருவாக துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட அதிக எண்ணிக்கையிலான திட்டங்கள் கண்டறியப்பட்டன.

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின், 02.11.2006ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 146–இல் "சிறப்பு முயற்சிகள்" என்ற பொருண்மை அலுவல் விதிகளில் முதல் அட்டவணையில் "ஒருங்கியல் பட்டியலில்" சேர்க்கப்படுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒரு திட்டத்தினை “சிறப்பு முயற்சி” திட்டமாகக் கருதுவதற்கு ஆராய வேண்டிய அறிவுரைகள் வழங்கப்பட்ட பின்னர் அதற்கான செயலாக்கங்களை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை அல்லது சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைத்து செயல்பாட்டின் முதிர்விற்குக் கொண்டுவருவதாகும். ஒரு குறிப்பிட்ட சிறப்பு முயற்சி முதிர்வு நிலை அடைந்துவிட்டது என்று முடிவெடுக்கப்பட்டு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் தொடர் கண்காணிப்பு இனி தேவையில்லை என்று கருதப்பட்டால், அந்தத் திட்டம் சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறையிடம் ஒப்படைக்கப்படும். இந்த முறையில், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் 18.01.2007ஆம் நாளிட்ட

அரசாணை (நிலை) எண் 10–ல், சென்னை மெட்ரோ இரயில் திட்டம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் கீழ் "சிறப்பு முயற்சி" திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 3.0 துறைத் தலைமையிடங்கள்

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள துறைகள் பின்வருமாறு:

i. மாநிலத் திட்டக் குழு
ii. பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை
iii. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை
iv. சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், இதற்கென ஏற்படுத்தப்பட்ட தனிச் செயலாளரின் (சிறப்பு முயற்சிகள்) கீழ் உள்ள ஒரு கூட்டுத் துறை நிறுவனம்

மேற்கண்ட துறைகளின் பணிகள் சுருக்கமாக பின்வருமாறு:

### 3.1 மாநிலத் திட்டக்குழு

**3.1.1** தமிழ்நாட்டில், 1971ஆம் ஆண்டு மே திங்கள் 25ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் மாநிலத் திட்டக்குழு ஒரு ஆலோசனை அமைப்பாக ஏற்படுத்தப்பட்டு, மாநிலத்தின் வளர்ச்சி குறித்த பல்வேறு செயல்பாடுகளில் தனது பரிந்துரைகளை அரசுக்கு அளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. 02.07.2011 அன்று ஒரு துணைத்தலைவர் மற்றும் ஆறு உறுப்பினர்களைக் கொண்டு மாநில திட்டக்குழு கடைசியாகத் திருத்தி அமைக்கப்பட்டது. அரசு கூடுதல் தலைமைச் செயலர், திட்டம், வளர்ச்சி மற்றும்

சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் அரசு முதன்மை செயலர், நிதித்துறை ஆகியோர் இக்குழுவின் அலுவல் சார் உறுப்பினர்களாவர். மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர்– செயலர் இக்குழுவின் நிருவாகப் பொறுப்பு வகிக்கிறார்.

### 3.1.2 மாநிலத் திட்டக்குழுவின் முதன்மையான பொறுப்புகள்:

1. ஐந்தாண்டுத் திட்டத்தின் முன்னுரிமைகள் மற்றும் அத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய புதிய திட்டங்கள் குறித்து ஆலோசனைகளை அரசிற்கு வழங்குதல்;

2. வரைவு ஐந்தாண்டு திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான வழிகாட்டும் குழுக்கள் மற்றும் பணிக்குழுக்களை அமைத்தல் மற்றும் வரைவு ஐந்தாண்டு திட்டத்தினை தயாரித்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்புதல்;

3. நிதி ஆதாரங்களுக்கேற்ப வரவு செலவுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவது குறித்து அரசுக்குப் பரிந்துரைத்தல்;

4. வரைவு ஆண்டுத் திட்டங்களை தயாரித்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்புதல்;

5. ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள இலக்குகள் மற்றும்

குறிக்கோள்களை எய்துவது குறித்தும் காலமுறை அடிப்படையில் ஆய்வு செய்தல்;

6. ஐந்தாண்டுத் திட்டத்தினை இடைக்கால ஆய்வு மேற்கொள்வதுடன், அவ்வாய்வின் அடிப்படையில் திட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்கள் மற்றும் திட்டங்களை திருத்தியமைத்தல் ஆகியன குறித்து அரசிற்கு ஆலோசனை அளித்தல்;

7. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் உதவியுடன், பெரிய திட்டங்களை மதிப்பீடு செய்தல், அம்மதிப்பீட்டின் அடிப்படையில் திட்டங்களைத் திருத்தியமைத்தல் மற்றும் செம்மைப்படுத்துதல் குறித்து அரசுக்கு பரிந்துரை செய்தல்;

8. பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டப் பணிகளை ஏற்கெனவே உள்ள அரசாணைகள் மற்றும் வழிமுறைகளின்படி திறம்பட செயல்படுத்துவது குறித்து அரசிற்கு ஆலோசனை வழங்குதல்;

9. பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டமிடலின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, திட்டமிடும் நடவடிக்கைகளை மாவட்டம்/ வட்டாரம்/ கிராம அளவில் மேற்கொள்ளுதல்;

10. ஐந்தாண்டுத் திட்டம்/ ஆண்டுத் திட்டங்களின் ஒரு பகுதியாக தாழ்த்தப்பட்ட/ மலைவாழ் மக்களுக்கான துணைத் திட்டங்களை தயாரிப்பது குறித்து அரசிற்கு ஆலோசனை வழங்குதல்;

11. ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின் படி, மாவட்ட திட்டங்களை மாவட்ட திட்ட குழுக்கள் தயாரிக்கும் பொருட்டு ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறைக்கு ஆலோசனை வழங்குதல்;

12. மனித மேம்பாட்டுக் குறியீடு, பாலின மேம்பாட்டுக் குறியீடு ஆகியவற்றில் மாற்றம் / பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய வளர்ச்சிக் காரணிகளை பல்வேறு நிலைகளில் கண்காணித்து அவற்றை சரிசெய்ய தேவையான வழிமுறைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை கூறுதல்;

13. பெருந்திட்டங்கள் மற்றும் திட்டங்களை வகுத்திடவும், செயல்படுத்தவும் தேவையான சிறப்பு மதிப்பீட்டாய்வுகளை மேற்கொள்ளுதல்;

14. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைக் கண்காணித்து, தேவையான அறிக்கைகளை தேவைப்படும் பொழுது அரசுக்கு அளித்தல் .

### 3.1.3 பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் (2007–2012)

31, மார்ச் 2012 வுடன் முடிவடைந்த பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் ஒதுக்கீட்டான ரூ. 85,344 கோடியுடன் ஒப்பிடும்போது அதன் செலவினம் ரூ.92,333 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. துறைவாரியான ஒதுக்கீடு மற்றும் செலவினங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (2007–2012)
துறைவாரியான ஒதுக்கீடு / செலவினம்

*(ரூபாய் கோடியில்)*

| **துறை** | **ஒதுக்கீடு** | **செலவினம்** |
|---|---|---|
| வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்தவை | 11,145 | 10,890 |
| ஊரக வளர்ச்சி | 10,241 | 11,386 |
| எரிசக்தி | 10,743 | 12,223 |
| தொழில் மற்றும் கனிமங்கள் | 3,716 | 2,592 |
| போக்குவரத்து | 11,647 | 10,482 |
| சமூக சேவைகள் | 35,827 | 39,946 |
| ஏனையவை | 2,025 | 4,814 |
| **மொத்தம்** | **85,344** | **92,333** |

### 3.1.4 பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2012–2017)

மாநிலத் திட்டக்குழு, தற்போது பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2012–2017) தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதன் முன்னோட்டமாக, “தமிழ் நாட்டிற்கான பன்னிரெண்டாவது திட்டத்திற்கான அணுகுமுறை அறிக்கையை” தயாரித்து தொடர்புடையவர்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை பெற வேண்டி இணையதளத்தில் வெளியிடப்பட்டது. இதுதவிர, தற்போதைய நிலை, பிரச்சனைகள், தடைகள் பொருத்தமான நடவடிக்கைகள் ஆகியவற்றை விவாதிப்பதற்காக துறை வல்லுநர்கள், அரசு அலுவலர்கள், கல்வியாளர்கள், சங்கங்கள் மற்றும் நிறுவனங்களை உள்ளடக்கிய 15 வழிகாட்டும் குழுக்கள் மற்றும் 47 பணிக்குழுக்கள் அமைக்கப்பட்டன.

இப்பணியை மேலும் வலுப்படுத்தும் விதமாக, மண்டல கருத்தரங்குகள் கோயம்பத்தூர், திருநெல்வேலி, மதுரை, கடலூர் மற்றும் திருச்சி ஆகிய ஐந்து மாவட்டங்களில் நடத்தப்பட்டு ஆலோசனைகள் பெறப்பட்டன. பணிக்குழு அறிக்கைகள் மற்றும் பலவழிகளின் மூலம் பெறப்பட்ட இதர தகவல்களை கொண்டு பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்கான துறைவாரியான அத்தியாயங்கள் தயாரிக்கப் பட்டன. இத்துடன், பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்ட அறிக்கை தயாரிப்பில் சென்னை பொருளியல் பள்ளி (MSE), சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் (MIDS), நிதி மேலாண்மை மற்றும் வளங்கள் நிறுவனம் (IFMR) போன்ற நிறுவனங்களுடன் ஒப்பந்த முறையில் இணைந்து செயல்பட்டு பன்னிரெண்டாவது திட்டத்திற்கான முதல் வரைவு அறிக்கை மாநில திட்டக்குழுவினால் தயாரிக்கப்பட்டு அனைத்து துறைகளின் இசைவினைப் பெற வேண்டி அனுப்பப் பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட ‘‘தமிழ் நாட்டிற்கான தொலைநோக்குத் திட்டம் 2023’’ (‘Vision Tamil Nadu 2023’)-ல் குறிப்பிடப்பட்டுள்ள விரிவான குறிக்கோள்கள் மற்றும் அரசின் முன்னுரிமைகளைக் கருத்திற் கொண்டு வரைவு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள திட்டக்குழுக் கூட்டத்தில் இந்த வரைவு திட்ட ஆவணத்திற்கான ஒப்புதல் பெறப்படும்.

### 3.1.5 ஆண்டு திட்டம் 2012–2013

மாநிலத்தின் ஆண்டுத் திட்டங்கள், மாநில மற்றும் நடுவண் அரசுகளின் ஐந்தாண்டுத் திட்ட

முன்னுரிமைகளையும், குறிக்கோள்களையும் பெரிதும் பின்பற்றி, உருவாக்கப்படுகின்றன. 2012–13-ம் ஆண்டிற்கான வரைவு ஆண்டு திட்டம் ரூ. 28,000 கோடி அளவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இது 2011–12 ஆம் ஆண்டு திட்ட ஒதுக்கீட்டை (ரூ.23,535 கோடிகள்) விட 18.97 சதவீதம் அதிகம் ஆகும். 2012–13 ஆம் ஆண்டுத் திட்டத்தின் நிதி ஆதாரம், திட்டப் பணிகள் மற்றும் மத்திய நிதியுதவி ஆகியவற்றின்மீது புது தில்லியில் விரைவில் நடைபெறவுள்ள மத்திய திட்டக்குழுக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்படும்.

### 3.1.6 புதிய திட்டங்களை மதிப்பீடு செய்தல்

ஆண்டுத் திட்டங்களைத் தயாரித்தலின் ஒரு பகுதியாக, 2012–13 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களை மாநிலத் திட்டக்குழு மதிப்பீடு செய்தது. அரசின் அனைத்துத் துறைச் செயலர்களிடமிருந்து, பகுதி II - புதிய திட்டங்களுக்கான கருத்துருக்களை மாநிலத் திட்டக்குழு பெற்று, 2011 டிசம்பர் திங்களில், அரசுச் செயலர்களுடனும், துறைத் தலைவர்களுடன், புதிய திட்டங்கள் பற்றிக் கலந்துரையாடி, தேவைகள் மற்றும் அரசின் முன்னுரிமைகளை ஆராய்ந்து ரூ.150.05 கோடிக்கான புதிய திட்டங்களைப் பரிந்துரைத்து, அவற்றை அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்தது.

### 3.1.7 தமிழ்நாடு நிலப் பயன்பாடு ஆராய்ச்சி வாரியம்

அரசாணை (நிலை) எண். 58, திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மாதிகு) துறை நாள்.10.02.2011–ல், தமிழ்நாடு நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியம், துணைத் தலைவர், மாநிலத் திட்டக்குழு, அவர்களின் தலைமையின் கீழ்

மாநிலத் திட்டக்குழுவில் ஒரு நிரந்தர அமைப்பாக ஏற்படுத்தப்பட்டது. முன்னர் மைய அரசு உதவியுடன் செயல்பட்டு வந்த நிலப்பயன்பாடு வாரியத்திற்கான நிதியுதவி முடிவு பெற்றதால், அதன் தொடர்ச்சியாக நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியம் செயல்படுகிறது. நிலப்பயன்பாட்டில், இன்றியமையாத இனங்களில் கலந்தாய்வு மற்றும் ஆராய்ச்சியை செயல்படுத்துவது இதன் நோக்கமாகும். இவ்வாரியப்பணிகளில் ஒன்றான பல்வேறு தொடர்புடையத் துறைகளுடன் முறையாக கலந்து ஆலோசித்து கொள்கை விருப்புரிமைகளை முடிவு செய்யும், மாநில திட்டக்குழு நீர் மற்றும் நிலவளத்தின் நீடித்த மேலாண்மை குறித்து கருத்தரங்கம் / பணிப்பட்டறைகள், மதிப்பீட்டு ஆய்வுகள் முதலானவைகளை நடத்தும்.

தமிழ் நாடு நிலப் பயன்பாடு ஆராய்ச்சி வாரியத்தின் முக்கிய குறிக்கோள்கள் (அ) நில வளத்தை மதிப்பீடு செய்தல், நிலக்கொள்கையை வகுப்பதில், அரசுக்கு அறிவுரைகள் வழங்குதல், ஒருங்கிணைத்தல், மாறிவரும் நிலப் பயன்பாட்டிற்கு ஏற்ப குறிப்பாக நல்ல விளை நிலங்களை வேறு பயன்பாட்டிற்கு மாற்றம் செய்வது குறித்த ஒரு அறிக்கை மற்றும் சாத்தியமான முன்னுரிமைகள் போன்றவற்றை தயாரித்தல், தரிசு நிலங்களை மேம்படுத்துதல், குறைந்த பயன்பாட்டு நிலங்களை வேறு பயன்பாட்டிற்கு மாற்றியமைத்தல், ஒருங்கிணைத்த அறிவியல் திட்டமிடுதலை செயல்படுத்துதல்; (ஆ) திட்டச் செயலாக்கத்தினை ஆய்வுசெய்வது, தேவையான தரவு தளத்தை ஏற்படுத்தி, அதனை ஒருங்கிணைந்த தொலைநோக்குத் திட்டமிடுதலுக்குப் பயன்படுத்த வழி முறைகளை மேற்கொள்ளுதல்; (இ) சுற்றுற்சூழல் மாசடைதல் மற்றும் புவி வெப்பமயமாதல் ஆகியவற்றால் சுற்றுச்சூழலில் ஏற்படும்

தாக்கத்தை தடுப்பது அல்லது தணிப்பதற்கான உறுதியான, அறிவியல் சார்ந்த கொள்கை பற்றி அரசுக்கு ஆலோசனை வழங்குதல்; (ஈ) நிலம் மற்றும் நீர் வளங்களைப் பாதுகாத்தல், மேலாண்மை செய்தல்.

**2011–12** ஆம் ஆண்டில் தமிழ்நாடு நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியம் கீழ்க்காணும் பணிகளை மேற் கொண்டுள்ளது:

- மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர் (வேளாண் மற்றும் பாசனம்) அவர்களின் தலைமையின் கீழ் ‘‘நிலப்பயன்பாட்டிற்கான’’ ஒரு துணைக் குழு உருவாக்கப்பட்டது. இத்துணைக்குழு அளித்துள்ள கருத்துகளின் அடிப்படையில் நிலப் பயன்பாடு குறித்து ஒரு அத்தியாயம் தயார் செய்யப்பட்டு ஐந்தாண்டு திட்ட ஆவணத்தில் **(2012–17)** சேர்க்கப்பட்டுள்ளது.

- தமிழ் நாடு நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியத்தின் முதல் கூட்டம் **2012**ம் ஆண்டு பிப்ரவரி **6**ஆம் தேதி துணைத்தலைவர், மாநிலத் திட்டக்குழு அவர்களின் தலைமையின் கீழ் மாநிலத் திட்டக்குழுவில் நடத்தப் பெற்று **2011-12** ஆம் ஆண்டிற்கான செயல் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஒப்புதல் பெறப்பட்டது.
- தமிழ்நாடு நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியம், கோயம்பத்தூர் வன மரபியல் மற்றும் வனப் பெருக்கு நிறுவனத்தினால் முன்மொழியப்பட்ட மூன்று வருட ஆராய்ச்சித் திட்டமான தமிழக மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்த, ‘‘ஒருங்கிணைந்த வறண்ட நில வேளாண் காடுகள் அமைப்பினை

மேம்படுத்துதல்“ என்னும் திட்டத்தினை ஏற்று ஒப்புதல் அளித்தது. இந்த ஆய்வு விரைவில் துவக்கப்படவுள்ளது.

- தமிழ் நாடு வனத்துறையினால் மேற்கொள்ளப்பட்ட “தமிழகத்தில் காடுகளின் பரப்பு” (Wood balance study) என்னும் ஆய்வறிக்கையினை சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள்/ பல்கலைக் கழகங்கள்/ தேர்ந்தெடுக்கப்பட்ட நூலகங்கள் ஆகியவற்றிற்கு வழங்க பல பிரதிகள் அச்சிடப்பட்டு அனுப்பப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியத்தில் மேற்கொள்ளப்பட உள்ள நிலப்பயன்பாடு தொடர்பான 2012-13 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டங்கள் தயாரிக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட துறைச் செயலர்களிடமிருந்து முன்மொழிவுகள் பரிசீலனைக்காகப் கேட்கப்பட்டுள்ளது.

### 3.1.8 மனித வள மேம்பாடு மதிப்பீடு

‘‘மனித வளர்ச்சிக்கென மாநில திட்டங்களை வலுப்படுத்துதல்’’ திட்டத்தின் கீழ் மத்திய திட்டக்குழு / ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டங்கள் (UNDP) நிதி உதவியுடன் பல்வேறு மாநிலங்களில், மனித வள மேம்பாட்டு அறிக்கைகளை தயார் செய்திட திட்டமிடப்பட்டது. அதன்படி, திண்டுக்கல், சிவகங்கை, திருவண்ணாமலை, கடலூர், நாகப்பட்டினம், நீலகிரி, கன்னியாகுமரி மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மனித வள மேம்பாட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. பயிலரங்கங்கள் வாயிலாக

அனைத்து மாவட்டங்களிலும் மனித வள மேம்பாடு குறித்த கோட்பாடுகள் பரப்பப்பட்டன.

### 3.1.9 2012–13 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

மாநிலத் திட்டக்குழு, 2012–13 ஆம் ஆண்டில் ரூ.40.00 இலட்சம் செலவில், விவசாயம், ஊரக வளர்ச்சி மற்றும் சுகாதாரத் துறைகளில் அரசு செயல்படுத்தி வரும் முத்திரைத் திட்டங்கள் குறித்து மாநிலத் திட்டக் குழுவினால் ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது.

## 3.2 பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை

**3.2.1** மாநில மற்றும் மைய அரசுகளின் திட்ட உருவாக்கத்திற்கு தேவையான விவரங்களை சேகரித்து, தொகுத்து வழங்குதல் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் நோக்கமாகும். மாநிலத்தின் புள்ளிஇயல் சேகரிப்பு பணியில் இத்துறை முகமை அமைப்பாக செயல்படுகிறது. இத்துறை வேளாண்மை, தொழில், மாநில வருவாய், மாவட்ட வருவாய், விலைகள், அங்காடி நிலவரம் ஆகிய இனங்களின் கீழ் அடிப்படை புள்ளி விவரங்களை சேகரித்து, தொகுத்து வழங்குகிறது. இத்துறை ஆண்டு புள்ளிஇயல் கையேடு, பருவமும் பயிரும் அறிக்கை, தமிழ் நாட்டு பொருளாதாரத்தின் மாதாந்திர ஆய்வறிக்கை, வேளாண்மை/ பொருளாதாரக் கணக்கெடுப்புகளின் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறையிலான அறிக்கைகள், 31 திட்டங்களின் கீழ் ஆண்டறிக்கைகள், ஒரு காலாண்டு புள்ளி விவர தொகுப்பு மற்றும் இதர மாதாந்திர அறிக்கைகளை தயாரித்து வழங்கி வருகிறது.

இத்துறைக்கு கீழ் குறித்த திட்டம் சார் மற்றும் திட்டம் சாரா பணிகள் முன்னுரிமையாக ஒப்படைக்கப்பட்டுள்ளன:

### 3.2.2 திட்டம் சார் பணிகள்

#### *அ) மாநில திட்டங்கள்*

**புள்ளி விவரங்கள் சேகரிப்பு முறைகளை நவீனப்படுத்தலும் மேலாண்மையும்**

நடைமுறை நிர்வாக வசதிக்காக, பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் பணிகள் அனைத்து நிலைகளிலும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.அனைத்து அலுவலர்களுக்கும் புள்ளி விவரங்களை தொகுப்பதிலும் அவற்றை உடன்நிகழ் மூலம் பரிமாற்றம் செய்யவும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. புள்ளி விவர வங்கி இத்துறையில் ஏற்படுத்தப்பட்டு முக்கியமான புள்ளி விவரங்கள் மற்றும் அறிக்கைகள் பராமரிக்கப்படுகின்றன. கணினி நூலகத்தில் முக்கிய அறிக்கைகள் பாதுகாப்பான முறையில் பராமரித்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், துறையிலுள்ள பிரிவுகளில் விவரங்களின் துரித உள் பரிமாற்றத்திற்காக மிகவும் சக்திவாய்ந்த உள் அலுவலக கணினி தொடர்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

#### *ஆ) மத்திய அரசினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்*

***1. வேளாண்மைக் கணக்கெடுப்பு:*** வேளாண்மைக் கணக்கெடுப்பு என்பது வேளாண்மை சார்ந்த புள்ளி விவரங்கள் சேகரிக்கும் முக்கியப் பணியாகும். நாட்டின் வேளாண்மை குறித்த புள்ளி விவரங்களை பெருமளவில்

சேகரித்தலும், தொகுத்தலும் இத்திட்டத்தின் முக்கிய செயல்பாடுகளாகும். இக்கணக்கெடுப்பு கைப்பற்றுதாரர்களை முக்கிய அலகாகக் கொண்டு நடத்தப்படும் கணக்கெடுப்பாகும். நிலப் பதிவேடுகளிலிருந்து நில சாகுபடியாளர்களின் சமூகநிலை, நிலப் பயன்பாடு, நீர்ப்பாசனத் தன்மை, பயிர் சாகுபடி முறை, குத்தகைத் தன்மை, கால்நடைகள், வேளாண் உபகரணங்கள் மற்றும் கருவிகளின் பயன், உரப் பயன்பாடு ஆகிய புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. **9–**வது வேளாண்மைக் கணக்கெடுப்பு **2010–11**ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு முதற்கட்டப் பணி மேற்கொள்ளப்பட்டு தற்பொழுது முடிவுற்ற நிலையில் இரண்டாம் கட்டப்பணி நடைபெற்று வருகின்றன.

***2. ஆறாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு***: நிறுவனங்களின் எண்ணிக்கையும், அதில் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் திரட்டி விரிவான புள்ளிவிவர கட்டமைப்பை உருவாக்குவதே பொருளாதாரக் கணக்கெடுப்பின் நோக்கமாகும். இவ்விவரங்களை அடிப்படையாகக் கொண்டு அமைப்புசாரா துறைக்கு தேவையான தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. திட்டமிடல், வளர்ச்சி உள்ளிட்ட பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்குத் தேவையான அடிப்படை விவரங்களை இக்கணக்கெடுப்பு வழங்குகிறது. இக்கணக்கெடுப்பு மத்திய அரசின் **100** விழுக்காடு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

- இக்கணக்கெடுப்பு தமிழ்நாட்டில் செப்டம்பர் **2012** முதல் மார்ச் **2013** வரையிலான காலத்திற்குள் ஏதேனும் இரண்டு மாத காலத்தில் நடத்தப்பட இருக்கிறது.
- பொருளாதாரக் கணக்கெடுப்பு பணிகள் செவ்வனே நடைபெற தமிழ்நாடு அரசு ஆணை நிலை எண் **96,**

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் **13.06.2011** க்கு இணங்க மாநில அளவிலான வழிகாட்டுதல் குழு மற்றும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- ஆறாவது பொருளாதாரக் கணக்கெடுப்பினை தமிழ்நாட்டில் நடத்துவதற்கான பணியிடங்கள் உருவாக்கத்திற்கும் **30** மாதங்கள் செயல்பாட்டில் இருக்கவும் இந்திய அரசின் மத்திய புள்ளி இயல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் தனது இசைவை தெரிவித்துள்ளது.

***3. பழங்கள், காய்கறிகள் மற்றும் சிறுபான்மைப் பயிர்கள் குறித்த பயிர் மதிப்பீட்டாய்வு:*** பழம், காய்கறி மற்றும் சிறுபான்மைப் பயிர்களுக்கான விளைச்சல் விகிதத்தை பயிர் அறுவடை பரிசோதனைகள் மூலம் துல்லியமாக கண்டறிந்து அதன் மூலம் பயிர் உற்பத்தி மற்றும் விளைச்சல் விகிதம் கணக்கிட இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், தோட்டக்கலைப் பயிர்களான மா, பலா, வாழை, திராட்சை, கொய்யா, ஆரஞ்சு, எலுமிச்சை மற்றும் அன்னாசி ஆகிய பழவகைப் பயிர்களுக்கும் மற்றும் தக்காளி, வெண்டை, கத்தரி, முட்டைகோசு மற்றும் சர்க்கரைவள்ளி ஆகிய காய்கறிப் பயிர்களுக்கான விளைச்சல் விவரங்கள் கணிக்கப்பட **2011–12**ஆம் ஆண்டில் **550** கிராமங்களில் **1100** பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்த திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **2011–12**ஆம் ஆண்டில் சிறுபான்மைப் பயிர் திட்டத்தின் கீழ், மிளகாய், வெங்காயம், மஞ்சள், உருளைக் கிழங்கு, கொத்தமல்லி, மரவள்ளிக் கிழங்கு, முந்திரி மற்றும் இஞ்சி ஆகிய பயிர்களில் **540** கிராமங்களில் **1080** பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்த

திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

***4. தேசிய தொழில்நுட்ப ஆள்திறன் தகவல் திட்டம்:*** தமிழ் நாட்டில் உள்ள அனைத்து பொறியியல்/ தொழில்நுட்பக் கல்வி/ மேலாண்மை/ மருந்தகம் / உணவக மேலாண்மை நிறுவனங்கள் மற்றும் உணவகத் தொழில்நுட்ப பயிலகங்கள் ஆகியவற்றிலிருந்து தேர்ச்சி பெற்றுச் செல்வோர் விவரங்கள், தொழில் நுட்ப ஆள்திறன் உற்பத்தி விவரங்கள், பொறியியல் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரர்களின் வேலை வாய்ப்பு குறித்த விவரங்கள் ஆகியவை பல்வேறு பாடப் பிரிவுகளின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் சேகரிக்கப்பட்டு தொழில்நுட்ப ஆள்திறன் சம்பந்தமாக தேவை, அளிப்பு விவரங்கள் மதிப்பிடப்படுகின்றன.

***5. இந்திய புள்ளி இயல் அமைப்பினை வலுப்படுத்தும் திட்டம்:*** உலக வங்கி உதவியுடன் மைய அரசின் நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்படும் இந்திய புள்ளிஇயல் அமைப்பினை வலுப்படுத்தும் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன.

- புள்ளிஇயல் பணிகளை ஒருங்கிணைத்தல் மற்றும் அதன் மேலாண்மையினை மேம்படுத்துதல்;
- புள்ளியியல் மனித வளத்தினை மேம்படுத்துதல் மற்றும் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்;
- தகவல் தொழில் நுட்பவியலை உள்ளடக்கிய செயல் இலக்குடன் உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்துதல்; மற்றும்
- புள்ளி விவரங்களை பரவலாக்குவதுடன் புள்ளிஇயல் செயல்பாட்டினை மேம்படுத்துதல்.

மைய அரசின் புள்ளி இயல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் இத்திட்டத்திற்கான முனைப்பு (Nodal) அமைச்சகமாகும். மாநில அரசு இத்திட்டத்தில் பங்கேற்பதற்கான ஒப்புதல் அளித்துள்ளது. இத் திட்டத்தை செயல்படுத்த ‘மாநில நெறிப்படுத்தும் குழு’ அரசு தலைமைச் செயலாளரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டிற்கான திட்ட முன்மொழிவு தொகையான ரூ.40.76 கோடிக்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மைய அரசு மற்றும் மாநில அரசினால் கையொப்பமிடப்பட்டு, 2011–2012 ஆம் ஆண்டிற்கு ரூ.11.544 கோடி மைய அரசால் தமிழ் நாட்டிற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. அரசாணை நிலை எண்.47, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (ST.2&E) துறை, நாள் 24.02.2012–ன்படி நிர்வாக மற்றும் நிதி ஒப்புதல் ரூ.40.76 கோடி இத்திட்டத்திற்கான கால முழுமைக்கும் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இத் திட்டத்தினை 2011-2012 ஆம் நிதி ஆண்டில் செயல்படுத்த ரூ.12.26 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

***6. மாநில மற்றும் மாவட்ட அளவில் 13–வது நிதிக் குழுவின் மானியத்தின் மூலம் புள்ளி இயல் அமைப்பை வலுப்படுத்துதல்:***

தரமான புள்ளி விவரங்கள் அடிப்படையில் முக்கிய கொள்கை முடிவுகள் எடுக்க ஏதுவாகவும், மாநிலங்களின் புள்ளி விவரத் திறனை அதிகரிக்கவும், மாநில மற்றும் மாவட்ட அளவில் தேவைப்படும் புள்ளி விவரங்களை துல்லியமாக குறிப்பிட்ட காலத்திற்குள்ளும் அளிப்பதற்கு ஏதுவாகவும், இந்திய புள்ளிஇயல் வலுப்படுத்தும் திட்டத்தின் கீழ் கொணரப்படாத இனங்களில் 13–வது நிதிக்குழு மொத்தம் ரூ.31 கோடியை 31 மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. மத்திய நிதித்

துறை இதற்கான வழிமுறைகளை **2011–12** முதல் **2014–15** ஆம் ஆண்டு வரை கீழ் குறித்த இனங்களில் மேற்கொள்ள சிறப்பு இலக்குகளை திட்டமிட்டுள்ளது.

- **i.** வணிக நிறுவனப் பட்டியலை (Business Register) தயாரித்தலும் அதன் நிலையை உயர்த்துதல்.
- **ii.** உள்ளாட்சி நிறுவனங்களின் வரவு–செலவின அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் மேம்படுத்துதல்.
- **iii.** வேளாண்மைப் பணிகள் தொடர்பான புள்ளி இயல் தரத்தினை மேம்படுத்துதல்.
- **iv.** மத்திய மாநில மாதிரிகளின் விவரங்களை ஒருங்கிணைத்து மாவட்ட அளவில் புள்ளி விவரங்கள் தயாரித்தல்.
- **v.** மாவட்ட அலுவலகங்களை மாநில தலைமையகத்துடன் இணையதள/ உள்தள வலைய வசதியுடன் இணைத்தல்.

மேற்குறித்த திட்ட இலக்குகள் –

(அ) குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் வல்லுநர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமித்தல், அரசு அங்கீகாரம் பெற்ற வெளி நிறுவனங்களுக்கு பணியளித்தல்

(ஆ) தேவையான தளவாடப் பொருட்கள்

(இ) பயிற்சி / கருத்தரங்கு

(ஈ) இதர செலவினங்கள் மற்றும்

(உ) சிறப்பு ஆய்வுகள்

ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டுமெனவும் மைய அரசு அறிவுறுத்தியுள்ளது.

மத்திய நிதித் துறையின் வழிகாட்டுதல்களின்படி, **2011–12** ஆம் ஆண்டில் அரசாணை நிலை எண். 217, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (ST.2&E) துறை, நாள் 11.11.2011 மூலம் ரூ.**6.20** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, தளவாடங்கள், உபகரணப் பெட்டிகள், ஒளி நகல் எந்திரங்கள், ஒலி மற்றும் ஒளி இயந்திரங்கள் வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

***7. பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்களை உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம்:*** ஒவ்வொரு ஆண்டும் 20 விழுக்காடு கிராமங்கள் எதேச்சை முறையில் தேர்வு செய்யப்பட்டு ஒன்பது முக்கிய பயிர்களுக்கு பருவம் வாரியாக (காரிப், ரபி மற்றும் கோடை) சாகுபடி பரப்பு, விதை உபயோகம் மற்றும் நீர்ப்பாசன ஆதாரம் குறித்த புள்ளி விவரம் கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் சேகரிக்கப்பட்டு ஒவ்வொரு பருவம் முடிவுற்றதும் அப்பயிர்களுக்கான பரப்பு, விதை உபயோகம் மற்றும் நீர்ப்பாசன ஆதாரம் குறித்து மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இவ்விவரங்கள் மத்திய அரசின் வேளாண் திட்டமிடலுக்கு அடிப்படை ஆதாரமாக அமைகிறது. இத்திட்டத்தின் மூலம் கூட்டுப் பயிர் பரப்பாய்வு பணியும் மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், பசலி 1421 (2011-12)ல், 3458 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு பணி நடைபெற்று வருகின்றது.

***8. பயிர் மேம்பாட்டுத் திட்டம்:*** இத்திட்டம் வேளாண்மைப் புள்ளிஇயல் சேகரித்தலில் உள்ள குறைபாடுகளைக் கண்டறியும் பொருட்டு முதன்மைக் கள அலுவலர்களான கிராம நிர்வாக அலுவலர்களின் பணிகளை மாநில அரசு அலுவலர்களாலும், மத்திய அரசு அலுவலர்களாலும் சிறப்பான மேற்பார்வைப் பணி மேற்கொள்ளப்பட்டு, இத்திட்டங்களை சிறப்புற மேம்படுத்துவதற்கான வழி முறைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. மேலும், இத்திட்டத்தினால் குறிப்பிடத்தக்க அளவில் பயிர் அறுவடைப் பரிசோதனைகளின் தரம் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நில அளவைப் பதிவேடுளை புள்ளிஇயல் ஆய்வாளர்களால் கூட்டு ஆய்வு மேற்கொள்ளும்போது அதில் காணப்படும் முரண்பாடுகள் வருவாய்த் துறை ஆணையருக்கும், அனைத்து மாவட்ட வருவாய் அலுவலருக்கும் அனுப்பப்படுகிறது.

இத்திட்டம் கீழ் குறித்த நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது:

- **பயிர் பரப்பில் மாதிரி ஆய்வு (ஏ.எஸ். 1.0 படிவம்)**

  2011-12 ஆம் ஆண்டில் பயிர் பரப்பாய்வுப் பணிக்காகத் தேர்வு செய்யப்பட்ட மத்திய மற்றும் மாநில மாதிரிகள் ஒவ்வொன்றிற்கும் 260 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இறுதி அறிக்கைகள் மூன்று கட்டங்களில் சேகரிக்கப்பட்டு தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

- **அடங்கல் பதிவேட்டின் பக்கவாரியான கூட்டுத்தொகை (ஏ.எஸ். 1.1 படிவம்)**

  ஒவ்வொரு பக்கவாரியாக சாகுபடி செய்யப்பட்ட பயிர்களின் பரப்பு விவரங்களின் கூட்டுத் தொகை தேர்வு செய்யப்பட்ட 260 கிராமங்களில் சரிபார்க்கப்பட்டு, இறுதி அறிக்கை பரிதாபாத்தில் உள்ள மத்திய தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. பசலி 1421 (2011-12)க்கு, 260 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

- **பயிர் அறுவடை பரிசோதனை மேற்பார்வைப் பணி (ஏ.எஸ். 2.0)**

  பசலி 1421 (2011-12)ல், மத்திய மற்றும் மாநில மாதிரிகளில் 780 அறுவடைப் பரிசோதனைகள் தேர்வு செய்யப்பட்டு பணி நடைபெற்று வருகின்றது.

### 3.2.3 திட்டம் சாரா பணிகள்

இத்துறையால் செயல்படுத்தப்படும் திட்டம் சாரா பணிகள் மூலமாக மாநில வருவாய் மதிப்பீடு, மாநிலக் கணக்கு, மூலதன ஆக்கம், ஆண்டுத் தொழில் ஆய்வு, மாதாந்திர தொழில் உற்பத்திக் குறியீட்டெண், பருவமும் பயிரும் அறிக்கை, பயிர் முன் மதிப்பீட்டறிக்கை, உணவு மற்றும் உணவு அல்லாத பயிர்களின் பயிர் மதிப்பீட்டு ஆய்வு, தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம், தென்னை மற்றும் கமுகு ஆய்வு, மழைப் புள்ளி விவரம் சேகரித்தல், நீர்ப்பாசனப் புள்ளி விவரம், வேளாண்மைக் கூலி, குறியீட்டெண், வீட்டுவசதிப்

புள்ளி விவரம், கட்டுமானப் பொருட்களின் விலைக் குறியீட்டெண், நகராட்சி ஆண்டுக் கையேடு, மாவட்டப் புள்ளிஇயல் கையேடு, வெளியீடுகள்- தமிழ்நாடு புள்ளிஇயல் கையேடு, ஆண்டுப் புள்ளிஇயல் சுருக்கக் கையேடு, கைத்தறி, ஆள்திறன் மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம், அயல்நாட்டு வாணிபம், அங்காடிப் புலனாய்வு மற்றும் விலைவாசி, தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீட்டெண், மொத்த விலைக் குறியீட்டெண், சுற்றுச்சூழல் புள்ளி விவரம், விற்பனை மிகுதித் திட்டம், தோட்டத் தொழிலாளர் ஆய்வு, நுகர்பொருள் ஆய்வு மற்றும் தேசிய மாதிரி ஆய்வு ஆகிய திட்டங்களை உள்ளடக்கிய பல்வேறு உற்பத்தி மதிப்பீடு அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

### 3.2.4 இலாப நோக்கமற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் குறித்த ஆய்வு

இலாப நோக்கமற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் வருவாய் ஆதாரம், உறுப்பினர் பங்கேற்பு மற்றும் அவர்களால் மேற்கொள்ளப்படும் நலத் திட்டங்கள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. மாநிலம் முழுவதும் சுமார் **1,41,322** இலாப நோக்கமற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில், **39,720** நிறுவனங்கள் மட்டும் அடையாளம் காணப்பட்டு விவரங்கள் சேகரிக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

### 3.2.5 வேலை மற்றும் வேலையற்றோர் குறித்த ஆய்வு

வேலை மற்றும் வேலையற்றோர் குறித்த ஆய்வு மத்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. அவர்களது அறிவுறுத்தலின் பேரில் திருவண்ணாமலை, வேலூர், கோயம்புத்தூர், நீலகிரி, திண்டுக்கல், தருமபுரி, தஞ்சாவூர், அரியலூர், திருச்சிராப்பள்ளி, சிவகங்கை, சேலம், கன்னியாகுமரி, தேனி, விழுப்புரம், கடலூர், கிருட்டிணகிரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, காஞ்சிபுரம் மற்றும் சென்னை ஆகிய இருபது மாவட்டங்களில் இக்கணக்கெடுப்பு பிப்ரவரி 2010 முதல் மே 2010 வரை முதல்கட்ட ஆய்வுக்காக நடத்தப்பட்டது. தமிழகத்தின் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 44.6% மற்றும் வேலையற்றோர் விகிதம் 6.0% உள்ளதாகவும் இவ்வாய்வு தெரிவிக்கின்றது.

இரண்டாம் நிலை ஆய்வு ஆகஸ்ட் 2011 முதல் நவம்பர் 2011 வரை மாநிலத்தில் உள்ள 32 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. இதற்கான முடிவுகள் தொகுக்கும் பணி நடைபெற்று வருகின்றது. மைய அரசு, வேலை மற்றும் வேலையற்றோர் 3-வது ஆய்வினை 2012-2013ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு நடத்திட உத்தேசித்துள்ளது.

### 3.2.6 உள்ளூர் அளவிலான மேம்பாடு குறித்த அடிப்படை புள்ளிவிவர முன்னோடி ஆய்வு

உள்ளூர் அளவிலான அடிப்படை புள்ளி விவரம் குறித்த முன்னோடி ஆய்வு 2008–09 ஆம் ஆண்டில் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் மைய

அரசின் புள்ளிஇயல் திட்ட செயலாக்க அமைச்சகத்தின் அறிவுறுத்தலின் பேரில் நடத்தப்பட்டது. இரண்டாம் கட்ட இவ்வாய்வு இதே மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் 2009-2010 ஆம் ஆண்டில் நடத்தி முடிக்கப்பட்டு தொகுக்கும்பணி முன்னேற்றத்தில் உள்ளது.

## 3.2.7. செயல்படுத்தப்படும் புள்ளிஇயல் திட்டங்களின் சுருக்க விவரம்

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையால் செயல்படுத்தப்படும் திட்டம் சார் மற்றும் திட்டம் சாரா திட்டப்பணிகளின் சுருக்க விவரம் பின்வருமாறு :

**வேளாண் புள்ளிஇயல் :**

| | | |
|---|---|---|
| 1. | பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி முன்மதிப்பீடு | ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர், டிசம்பர், மார்ச் மற்றும் ஜுன் மாதங்களில் பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் முன்மதிப்பீடு செய்யப்படுகின்றன. |
| 2. | ஜமாபந்தி மூலம் இறுதி செய்யப்படும் கிராமவாரியான பரப்பு | ஒவ்வொரு பசலி ஆண்டு முடிவிலும் கிராம வாரியான பயிர் பரப்பு விவரங்கள் ஜமாபந்தியில் இறுதி செய்யப்பட்டு மாவட்ட வாரியாகவும், மாநில அளவிலும் தொகுக்கப்படுகின்றன. |
| 3. | பொது பயிர் மதிப்பீட்டாய்வு | சுமார் 8000 பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்தப்பட்டு முக்கியமான 16 பயிர்களுக்கு விளைச்சல் மதிப்பீடுகள் கணிக்கப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| 4. | பழங்கள், காய்கறிகள் ஆகியவை குறித்த பயிர் மதிப்பீட்டாய்வு | மா, பலா, வாழை, அன்னாசி, கொய்யா, ஆரஞ்சு, திராட்சை, எலுமிச்சை ஆகிய 8 பழப்பயிர்களிலும், கத்தரி, தக்காளி, வெண்டை, முட்டைக்கோசு, சர்க்கரைவள்ளி ஆகிய 5 காய்கறிப் பயிர்களிலும் சுமார் 1100 பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்தப்பட்டு விளைச்சல் மதிப்பீடுகள் கணிக்கப்படுகின்றன. |
| 5. | சிறுபான்மைப் பயிர் மதிப்பீட்டாய்வு | மஞ்சள், மிளகாய், மரவள்ளி, கொத்தமல்லி, இஞ்சி, வெங்காயம், உருளைக்கிழங்கு, முந்திரி ஆகிய 8 சிறுபான்மைப் பயிர்களில் சுமார் 1080 பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்தப்பட்டு விளைச்சல் மதிப்பீடுகள் கணிக்கப்படுகின்றன. |
| 6. | தென்னை மற்றும் கமுகு குறித்த பயிர் மதிப்பீட்டாய்வு | சுமார் 380 கிராமங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தென்னை பரப்பு மற்றும் உற்பத்தி மதிப்பீடும், சுமார் 70 கிராமங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கமுகு பரப்பு மற்றும் உற்பத்தி மதிப்பீடும் செய்யப்படுகின்றன. |
| 7. | தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் | 2011–2012 ஆம் ஆண்டில், இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கும்பொருட்டு 24 பயிர்களின் கீழ் அறிவிக்கை செய்யப்படும் வட்டாரம் / குறுவட்டம் வாரியாக சுமார் 83098 பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு விளைச்சல் மதிப்பீடுகள் கணிக்கப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| 8. | மேம்படுத்தப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் | இத் திட்டம், தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. வட்டார / உள்வட்ட அளவில் பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்துவதற்கு பதிலாக அனைத்து வருவாய் கிராமங்களிலும் பயிர் அறுவடை பரிசோதனைகள் முன்னோடித் திட்டமாக நடத்த நாமக்கல், கடலூர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ் நாட்டில் 2011–2012ஆம் ஆண்டில் ராபி பருவம் முதல் துவக்கப்பட்டு 11 பயிர்களுக்கு 17,220 பரிசோதனைகள் நடத்த திட்டமிடப்பட்டு பணி நடைபெற்று வருகின்றது. |
| 9. | வேளாண்மைக் கணக்கெடுப்பு | 9–வது வேளாண்மைக் கணக்கெடுப்பு தற்பொழுது தொடங்கப்படவுள்ளது. நிலக் கைப்பற்று வகை, கைப்பற்றுதாரரின் சமூக தன்மை, நிலப் பயன்பாடு, பாசன வகை, பயிரிடப்படும் முறை, கைப்பற்று உரிமையின் தன்மை, கால்நடைகள், வேளாண்மை கருவிகள், உரப் பயன்பாடு ஆகியவை கணக்கெடுக்கப்படவுள்ளன. |
| 10. | பயிர் மேம்பாட்டுத் திட்டம் | கிராம நிர்வாக அலுவலர்களால் பராமரிக்கப்படும் கிராம கணக்குகளில் ஏற்படும் குறைபாடுகள் இத்திட்டம் மூலம் ஆய்வு செய்யப்படுகின்றன. |
| 11. | உரிய காலத்தில் பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்களை மதிப்பிடும் திட்டம் | ஒவ்வொரு ஆண்டும் 20 விழுக்காடு மாதிரி கிராமங்களில் நில பயன்பாடு முறை, முக்கிய பயிர் வாரியான பரப்பு, பயன்படுத்தப்பட்ட விதைகளின் ரகம், நீர்ப்பாசனம் போன்றவை இத்திட்டத்தினால் மதிப்பீடு செய்யப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| 12. | மழைப் புள்ளிஇயல் | சுமார் 628 மழைமானி நிலையங்களிலிருந்து மழை விவரங்கள் சேகரிக்கப்பட்டு, மாதம், பருவம், ஆண்டு வாரியாக தொகுக்கப்படுகின்றன. |
| 13. | நீர்ப்பாசன புள்ளிஇயல் | பாசன ஆதாரங்கள் வாரியாக முக்கிய பயிர்களின் பரப்பு, நீர்ப்பாசன வகை ஆகிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு தொகுக்கப்படுகின்றன. |
| 14. | வேளாண்மைக் கூலிகளுக்கான குறியீட்டெண் | மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் ஒவ்வொரு கிராமம் தேர்வு செய்யப்பட்டு, அவற்றில் விவசாய தொழில்களுக்கு வழங்கப்படும் கூலி விவரங்கள் சேகரிக்கப்பட்டு விவசாயக் கூலி குறியீட்டெண் மதிப்பிடப்படுகிறது. |
| 15. | விற்பனை மிகுதி திட்டம் | நெல் உற்பத்தியில் வழங்கப்பட்ட கூலி, விதைப் பயன்பாடு, சொந்த உபயோகம் போன்றவை தவிர விற்பனைக்கு ஒதுக்கப்படும் நெல் அளவு குறித்து மதிப்பீடு செய்யப்படுகிறது. |
| 16. | பேரிடர் மேலாண்மை | எதிர்கால கொள்கை முடிவுகளுக்கு பயன்படும் வகையில் மாவட்ட வாரியாக ஏற்படும் இயற்கை பேரிடர் அழிவு மற்றும் மீட்பு தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்பட்டு, மாநில அளவில் தொகுக்கப்படுகின்றன. |
| 17. | சுற்றுச் சூழல் புள்ளிஇயல் | சுற்றுச் சூழல் தொடர்பான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ‘‘சுற்றுச் சூழல் தொகுப்பாக’’ வெளியிடப்படுகிறது. |

**சமூகப் புள்ளிஇயல்:**

| | | |
|---|---|---|
| 18. | தேசிய மாதிரி ஆய்வு | குடும்ப நுகர்வோர் செலவினம் மற்றும் சிறப்பு ஆய்வுகளான வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை, அமைப்புசாரா துறைகள் குறித்த ஆண்டு ஆய்வு, குடிநீர், சுகாதாரம் மற்றும் வீட்டுவசதி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |
| 19. | வீட்டுவசதிப் புள்ளிஇயல் | பொது மற்றும் தனியார் துறைகளில் கட்டுமான விவரங்கள் குறித்த புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. |
| 20. | கட்டுமான செலவு குறித்த குறியீட்டெண் | சில முக்கிய கட்டுமானப் பொருட்களின் விலை விவரங்கள் மற்றும் கட்டுமான தொழிலாளர்களின் கூலி விவரங்கள் மாநிலத்தின் 16 மாவட்ட மையங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு காலாண்டு அடிப்படையில் குறியீட்டெண் கணிக்கப்படுகின்றது. |
| 21. | தேசிய தொழில்நுட்ப ஆள்திறன் தகவல் அமைப்பு | i) பொறியியல், தொழில்நுட்பக் கல்வி, மேலாண்மை, மருந்தியல் மற்றும் சமையல்கலைக் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை மற்றும் பட்டம் பெற்றோர் ஆகிய விவரங்கள் குறித்து ஆண்டறிக்கை வெளியிடப்படுகிறது.<br><br>ii) மேற்குறித்த கல்வி நிறுவனங்களில் பயின்று தேர்ச்சி பெற்றோர் பட்டியல் தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் தொழில்நுட்ப ஆள்திறன் வேலைவாய்ப்பு ஆண்டறிக்கை தயாரிக்கப்படுகிறது. |

**தொழில் புள்ளி விவரம் :**

| | | |
|---|---|---|
| **22.** | ஆண்டுத் தொழில் ஆய்வு | தொழிற்சாலை சட்டம் **1948**ன் பிரிவு 2m(i) மற்றும் 2m(ii) கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களில் முதலீடு, கடன் பொறுப்புகள், வேலை செய்யும் பணியாட்களுக்கான ஊதிய விவரம், உள்ளீடு மற்றும் உற்பத்தி, மதிப்புக் கூடுதல் ஆகிய விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. |
| **23.** | தொழிற் உற்பத்திக் குறியீட்டெண் | தேர்வு செய்யப்பட்ட **1373** நிறுவனங்களில் உற்பத்தி விவரங்கள் சேகரிக்கபட்டு மாதாந்திர குறியீட்டெண் கணிக்கப்படுகிறது. |
| **24.** | கைத்தறிப் புள்ளி விவரம் | கைத்தறி பொருட்களின் உற்பத்தி, விற்பனை மற்றும் இருப்பு ஆகிய விவரங்கள் காலாண்டுதோறும் சேகரிக்கப்பட்டு அறிக்கை தொகுக்கப்படுகிறது. |
| **25.** | அயல்நாட்டு வாணிபம் | கடல் வழி, ஆகாய வழி மூலம் நடைபெறும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விவரங்கள் கலால் துறையிலிருந்து பெறப்பட்டு ஆண்டறிக்கை தயாரிக்கப்படுகிறது. |
| **26.** | தோட்டத் தொழிலாளர் புள்ளி விவரம் | தோட்டத் தொழில் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட **504** காபி, தேயிலை, இரப்பர் தோட்டங்களில் பணிபுரியும் பணியாளர்களின் வேலைவாய்ப்பு, சராசரி வேலை நாட்கள் மற்றும் பெறப்படும் கூலி விவரங்கள் ஒவ்வொரு காலாண்டும் பெறப்பட்டு அறிக்கை தயாரிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 27. | பொருளாதாரக் கணக்கெடுப்பு | அனைத்து தொழில் நிறுவனங்களிலும் முழு அளவில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு மாநிலத்தில் உள்ள தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை, அதன் அமைப்பு, வேலைவாய்ப்பு, பணியாட்கள் மற்றும் பணியாட்களில்லா நிறுவனங்கள் போன்ற விவரங்கள் சேகரிக்க இக்கணக்கெடுப்பு வழிவகை செய்கிறது. |

**மாநில வருவாய் புள்ளி விவரங்கள் :**

| | | |
|---|---|---|
| 28. | மாநில வருவாய் மற்றும் மாவட்ட வருவாய் மதிப்பீடு | பொருளாதார வளர்ச்சியைக் கணிக்க உதவும் வகையில் 17 உட் பிரிவுகளின் கீழ் மொத்த/நிகர மாநில வருவாய் மற்றும் தனிநபர் வருவாய் ஆகியவை கணிக்கப்படுகின்றன. மாவட்ட வருவாய் மதிப்பீடுகளும் கணிக்கப்படுகின்றன. |
| 29. | மாநிலக் கணக்குகள் | அரசின் ஆண்டு நிதிநிலை அறிக்கை விவரங்களும், 1,104 உள்ளாட்சி அமைப்பின் விவரங்களும் சேகரித்து தொகுக்கப்படுகின்றன. |
| 30. | மூலதன ஆக்கம் | மாநில பொதுத் துறைக்கான மொத்த நிலையான மூலதன ஆக்கம் கணிக்கப்படுகின்றன. |

**விலைவாசிப் புள்ளி விவரங்கள் :**

| | | |
|---|---|---|
| 31. | அங்காடிப் புலனாய்வுத் திட்டம் மற்றும் விலைகள் | மாநிலத்தில் உள்ள 96 அங்காடி புலனாய்வு மையங்கள் மூலம் முக்கிய வேளாண்மைப் பொருட்களின் விலைகள், வரத்து, இருப்பு, அனுப்புகை போன்ற அங்காடி நிலவரப் போக்கு ஆகிய விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| 32. | மொத்த விலைக் குறியீட்டெண் | வேளாண்மை மற்றும் தொழில் சார்ந்த பொருட்களுக்கான மொத்த விலை விவரங்கள் சேகரித்து ஒவ்வொரு மாதமும் தமிழ் நாட்டிற்கான மொத்த விலைக் குறியீட்டெண் கணிக்கப்படுகின்றது. |
| 33. | நுகர்வோர் விலைக் குறியீட்டெண் | 6 மையங்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீட்டெண் கணிக்க விலைவாசிப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு சிம்லா தொழிலாளர் அமைப்பகத்திற்கு அளிக்கப்படுகின்றன. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மூலமாக மாதந்தோறும் கடலூர் மற்றும் நாகர்கோயில் மையத்திற்கு நுகர்வோர் விலைக் குறியீட்டெண் கணிக்கப்படுகின்றன. |

**இதர இனங்கள் :**

| | | |
|---|---|---|
| 34. | வெளியீடுகள் | இத்துறையிலிருந்து முக்கியமாக தமிழ்நாடு புள்ளிஇயல் கையேடு, ஆண்டு புள்ளிஇயல் தொகுப்பு, பருவமும் மற்றும் பயிரும் பற்றிய அறிக்கை, மாதாந்திர தமிழக பொருளாதார ஆய்வறிக்கை, மாவட்ட புள்ளிஇயல் கையேடு மற்றும் வட்டாரப் புள்ளிஇயல் கையேடு உள்ளிட்ட 37 அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. |
| 35. | பயிற்சி | அறிமுகப் பயிற்சி, பணியிடைப் பயிற்சி மற்றும் கணினி செயல்பாட்டுப் பயிற்சி குறிப்பிட்ட அளவில் பணியாளர் திறனை மேம்படுத்தும் விதமாக அளிக்கப்பட்டு வருகிறது. இந்திய புள்ளிஇயல் வலுப்படுத்தப்படும் திட்டத்தின் கீழ் அதிகப்படியான பயிற்சி திட்டங்கள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. |

### 3.2.8 மாநில புள்ளிஇயல் குழு

புள்ளிஇயலின் இன்றியமையாத் தன்மையை உணர்ந்து, அரசு மாநில புள்ளிஇயல் குழுவினை அரசு ஆணை நிலை எண்.13, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (புஇ.2(ம)இ) துறை, நாள் 03.03.2008 மூலம், புள்ளிஇயல்அமைப்பு செவ்வனே செயல்படவும், பிற துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பினை வலுப்படுத்தவும், பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் சிறப்பு அம்சமாகக் கொண்டு புள்ளி விவரங்களை உருவாக்கும் அரசுத் துறைகளை நெறிமுறைப்படுத்தவும், முறையாக புள்ளி விவரங்களை சேகரிக்கவும், செயல்படுத்தவும், சேகரித்து வைக்கவும், மீளப்பெறவும், வெளிப்படுத்தவும், அரசுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும், கல்வியாளர்களுக்கும் உதவும் வகையில் இக்குழு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

### 3.2.9 2012–2013ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தும் வகையில் பகுதி–II திட்டத்தின்கீழ் 2012–2013ஆம் ஆண்டுக்கு ரூ.30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.3 மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

பெருமளவிலான வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்டங்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் நிதியளித்து நிறைவேற்றி வருகின்றன. அந்தத் திட்டங்களின் தாக்கம் மற்றும் பயன்களை மதிநுட்பத்துடன் மதிப்பீடு செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அதன்படி மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மதிப்பீட்டாய்வுகளை மேற்கொண்டு கொள்கைகள் வகுப்பது மற்றும் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு அரசுக்கு உதவி வருகிறது. மேலும் இத்துறை இம்மாநில பொருளாதார நிலையைத் தொகுப்பாய்வு செய்து அறிக்கைகள் தயாரித்து அரசுக்கு அளிக்கிறது.

### 3.3.1. இத்துறையின் முக்கியப் பணிகளாவன

i. மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;
ii. குறிப்பிட்ட பிரிவுகளில் திட்டங்களைச் சிறப்பு மதிப்பீடு செய்தல் மற்றும் சமூகப் பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளுதல்; மற்றும்
iii. வருடாந்திர வெளியீடுகளான 'தமிழ்நாடு – பொருளாதார ஆய்வு' மற்றும் தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 'பொருளாதாரம் மற்றும் பணிவாரியான பகுப்பாய்வு' மேற்கொள்ளல்.

### 3.3.2. கீழ்க்கண்ட நோக்கங்களைக் கண்டறிவதற்காக மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன:

i. திட்ட வடிவமைப்பு;
ii. திட்ட செயல்முறை மற்றும் செயல் விளைவுகளை மதிப்பிடல்;
iii. செயல் இலக்கு மற்றும் நிதி இலக்கில் காணப்படும் முன்னேற்றம்;
iv. திட்ட நோக்க நிறைவேற்றம்;
v. திட்டப்பயன்கள் குறிப்பிட்ட பயனாளிகளைச் சென்றடைகின்றனவா என்று ஆய்வதுடன் செலவழிக்கப்படும் தொகைக்கு உரிய மதிப்பிலான பயன்கள் ஏற்பட்டனவா என்று ஆய்தல்.

**3.3.3.** தமிழ்நாட்டில் மாநில, மத்திய அரசுகள் மற்றும் உலக வங்கி நிதி உதவியுடன் நடைபெற்று வரும் திட்டங்கள், டானிடா திட்டம், சிடா திட்டம், ஐரோப்பிய பொருளாதாரக் கழகத் திட்டங்கள், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை மற்றும் பன்னாட்டு வளர்ச்சிக் கழகத் திட்டங்கள் ஆகியவை இத்துறையால் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களும் அவற்றின் வேறுபட்ட உட்கூறுகளும் தொடர்ச்சியாக மதிப்பீட்டாய்வு செய்யப்படுகின்றன. இவை தவிர, குறுகிய கால உடனடி மதிப்பீடுகளும் மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**3.3.4.** இத்துறை தொடங்கப்பட்டதிலிருந்து, பிப்ரவரி – 2012 ஆம் ஆண்டு வரை, பல்வேறு துறைகளைச் சார்ந்த 691 மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துறைகளாவன: சத்துணவு, சமூகநலம், சுகாதாரம், நீர்ப்பாசனம், வேளாண்மை, காடு வளர்ப்பு, கல்வி, வீட்டுவசதி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், தோட்டக்கலை, போக்குவரத்து மற்றும் அடிப்படை வசதிகள் ஆகும்.

### 3.3.5. 2012–2013 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் மற்றும் அலுவலர்களின் பணித் திறனை உயர்த்திடவும் 2012–13ஆம் ஆண்டிற்கு ரூ.20.00 இலட்சம் பகுதி–II திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன:

1. வெளி நிபுணர்கள் மூலம் மதிப்பீட்டாய்வுகளை மேற்கொள்ளல்;

2. தொழில் நுட்பப் பணியாளர்களுக்குத் தேசீய அளவில் பயிற்சி அளித்து பட்டறிவு பயணம் மேற்கொள்ளுதல்; மற்றும்

3. கணினிகள், லேப்டாப் மற்றும் இதர கணினி சார்ந்த துணைப் பொருட்கள் வாங்குதல்.

## 3.3.6. 2012–13 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள்

2012–13ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளைச் சார்ந்த 20 ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், பாசனப்பரப்பு வளர்ச்சித் திட்டம், பல்வேறு துறை சார்ந்த முக்கிய திட்டங்கள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவை தவிர, 'தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை' மற்றும் 'தமிழ்நாடு பொருளாதாரம் மற்றும் பணிவாரியான பகுப்பாய்வும்' வெளியிடப்படவுள்ளன.

## 3.4 சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள்

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் 29.4.2003 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.31இல் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையில் சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்களுக்காக ஒரு பிரிவு ஏற்படுத்தலாம் என அரசு முடிவு செய்தது. திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் முக்கிய நோக்கம் வெவ்வேறு ஆதாரங்களிலிருந்து உருவாகும் புத்தாக்கத் திட்டங்களைச் செயல்படுத்துவது ஆகும். சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்துவதற்கு ஏராளமான திட்டங்கள் கண்டறியப்பட்டன.

அரசாணை (நிலை) எண்.146, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை நாள் 2.11.2006இல் "சிறப்பு முயற்சிகள்" என்ற பொருண்மை அலுவல் விதிகளில் முதல் அட்டவணையில் ஒருங்கியல் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும் ஒரு முயற்சி எவ்வாறு சிறப்பு முயற்சியாக உருவாகிறது என்பது பற்றியும் அதனை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையால் செயல்படுத்தப்படுதல் அல்லது இறுதிவரை ஒருங்கிணைக்கப்படுதல் ஆகியவை குறித்தும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு முயற்சி முதிர்வு நிலை அடைந்து திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் கவனம் தேவைப்படாத நிலையில், அந்தத் திட்டம் உரிய நிர்வாகத் துறைக்கு மாற்றம் செய்யப்படும். இந்த அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.10, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 18.01.2007–இல், சென்னை மெட்ரோ இரயில் திட்டம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் ‘‘சிறப்பு முயற்சி’’ திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### 3.4.1 சிறப்பு முயற்சி: மெட்ரோ இரயில் திட்டம்

அரசாணை (நிலை) எண்.10, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 18.01.2007ல், சென்னை மெட்ரோ இரயில் திட்டம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் ‘‘சிறப்பு முயற்சி’’ திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### 3.4.2 சென்னை மெட்ரோ இரயில் திட்டம்

சென்னைப் பெருநகரம் அதிவேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இதனால் சாலைகளில் போக்குவரத்தின் அளவும் அதிகரித்துவருவதால், போக்குவரத்து கட்டமைப்பு அதிக அளவில் தேவைப்படுகின்றது. இந்த தேவையைப் பூர்த்தி செய்வதன் முதற்கட்டமாக, ஒரு புதிய துரித இரயில் போக்குவரத்துத் தேவையின் அவசியத்தை உணர்ந்து,

தமிழ்நாடு அரசு சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை நிறைவேற்றிட முடிவு செய்துள்ளது. இந்தத் திட்டத்தின் குறிக்கோள் சென்னைப் பெருநகர மக்களுக்கு வேகமான, நம்பத்தக்க, வசதியான, திறன்மிக்க மற்றும் சிக்கனமான பொதுப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவது ஆகும். மேலும் இத்திட்டம் இதரப் பொது மற்றும் தனியார் போக்குவரத்து வசதிகளாகிய, பேருந்து, புறநகர் இரயில்கள் மற்றும் பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டங்களுடனும், மேலும் எதிர்காலத்தில் மோனோ இரயில் உள்ளிட்ட கூடுதல் இரயில் அமைப்புகளுடனும் சீரிய முறையில் ஒருங்கிணைக்கப்படும்.

டில்லி மெட்ரோ இரயில் நிறுவனம் (சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தற்போதய முதன்மை ஆலோசகர்) தயார்செய்து வழங்கிய விரிவான திட்ட அறிக்கையின் அடிப்படையில் இரண்டு வழித்தடங்கள் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டுவருகின்றன. வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரை **23.1** கி.மீ நீளத்திலும் மற்றும் சென்னை சென்ட்ரலிலிருந்து புனித தோமையார் மலை வரை **22.0** கி.மீ நீளத்திலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த வழித்தடங்களில் கீழ்காணும் நிறுத்த நிலையங்கள் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது:

வழித்தடம்–**1**: வண்ணாரப்பேட்டை – மண்ணடி – உயர்நீதி மன்றம் – சென்னை சென்ட்ரல் – அரசினர் தோட்டம் – எல்.ஐ.சி. – ஆயிரம் விளக்கு – ஜெமினி – தேனாம்பேட்டை சேமியர்ஸ் சாலை – சைதாப்பேட்டை – சின்ன மலை – கிண்டி – ஆலந்தூர் – அலுவலர் பயிற்சி நிலையம் –

மீனம்பாக்கம் – சென்னை விமானநிலையம் ; மற்றும்

வழித்தடம்–2: சென்னை சென்ட்ரல் – எழும்பூர் – நேரு பூங்கா – கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி – பச்சையப்பன் கல்லூரி – ஷெனாய்நகர் – அண்ணாநகர் கிழக்கு – அண்ணா நகர் டவர் – திருமங்கலம் – கோயம்பேடு – சென்னை புறநகர் பேருந்து நிலையம் – அரும்பாக்கம் – வடபழனி – அசோக் நகர் – கே.கே. நகர் – சிட்கோ – ஆலந்தூர் – புனித தோமையார் மலை.

மேற்கண்டுள்ள இரண்டு வழித்தடங்களும் சென்னை சென்ட்ரல் மற்றும் ஆலந்தூரில் ஒன்றாக இணையும். வழித்தடம் 1 இல் வண்ணாரப்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரையிலுள்ள பகுதியும் மற்றும் வழித்தடம் 2 இல் சென்னை சென்ட்ரல் முதல் திருமங்கலம் வரையிலுள்ள பகுதியும் நிலத்திற்கடியிலும் எஞ்சியுள்ள பகுதி உயர்த்தப்பட்ட நிலையிலும் செயல்படுத்தப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு வழித்தடங்களுக்கும் தமிழ்நாடு அரசு தனது கொள்கை அளவிலான ஒப்புதலை வழங்கியதைத் தொடர்ந்து, மத்திய அரசின் நிதியுதவி மற்றும் உள்நாடு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெறுவதற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்தது. இத்திட்டத்தினை மத்திய அரசும் மாநில அரசும் கூட்டாக இணைந்து ரூ.14,600 கோடி செலவில் கட்டிமுடிப்பதற்கு மத்திய அரசு தனது நிர்வாக ஒப்புதலை பிப்ரவரி 2009 இல் வழங்கியுள்ளது. ஏற்கனவே அமைக்கப்பட்ட சிறப்புவகை நிறுவனத்தை (Special Purpose Vehicle) ஒரு கூட்டு முயற்சி

நிறுவனமாக மாற்றியமைக்கவும் உத்தேசிக்கப்பட்டது. மத்திய அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு திட்ட மதிப்பீட்டில் 15 சதவிகிதத்தை பங்கு மூலதனமாகவும், 5 சதவிகிதத்தை சார்நிலைக் கடனாகவும் தர ஒப்புக்கொண்டுள்ளது. அதே போன்று தமிழ்நாடு அரசும் திட்ட மதிப்பீட்டில் 15 சதவிகிதத்தைப் பங்கு மூலதனமாகவும், 5.78 சதவிகிதத்தை சார்நிலைக் கடனாகவும் தர ஒப்புக்கொண்டுள்ளது. மீதமுள்ள 59.22 சதவிகிதத்தை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையிடமிருந்து (Japan International Cooperation Agency) மத்திய அரசு இதுபோன்ற வெளிநாட்டு கடனுதவி பெறுவதற்கு வெளியிட்டுள்ள வரைமுறைகளுக்கிணங்க கடனாகப் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு ‘சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட்’ என்ற நிறுவனத்தை 3.12.2007 அன்று கம்பெனிகள் சட்டத்தின் கீழ் ஏற்கனவே நிறுவியிருந்தது. இந்நிறுவனம் பின்னர் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்குகளை வெளிக்காட்டும் வகையில் ஒரு கூட்டு முயற்சி நிறுவனமாக 4.6.2009 அன்று மாற்றியமைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தின் செயலாளரையும் சேர்த்து 5 இயக்குநர்களை மத்திய அரசும், மேலாண்மை இயக்குநரையும் சேர்த்து 5 இயக்குநர்களை மாநில அரசும் நியமித்துள்ளன.

தமிழ்நாடு அரசு ரூ.1185 கோடியைப் பங்கு மூலதனமாகவும் ரூ.844 கோடியைச் சார்நிலைக்கடனாகவும் வழங்கியுள்ளது. மத்திய அரசு 31.3.2012 வரை ரூ.733.79 கோடியைப் பங்கு மூலதனமாகவும், ரூ.124 கோடியைச் சார்நிலைக் கடனாகவும் மற்றும் ரூ.1860 கோடியை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் முதுநிலைக் கடனை நிறுவனத்திற்கு அனுப்பும் உதவியாகவும் வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக மாநில அரசு மற்றும் அதன் சார்பு நிறுவனங்களின் நிலங்கள் அரசாணைகள் மூலம் பெறப்படுகின்றன. மத்திய அரசு மற்றும் அதன் சார்பு நிறுவனங்களின் நிலங்களை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் நேரடியாகப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. தனியார் நிலங்களைப் பொறுத்தவரையில், நிலக் கையெடுப்புச் சட்டம் 1894இன் கீழ் 90 சதவீத நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கால அட்டவணையின்படி முன்னேறி வருகிறது. உயர்த்தப்பட்ட வழித்தடங்களுக்கான 7 பகுதிகளுக்கும், நிலத்தடி வழித்தடங்களுக்கான 5 பகுதிகளுக்கும் டிப்போவிற்காக 2 பகுதிகளுக்கும் மற்றும் அமைப்புகள் சார்ந்த 8 பகுதிகளுக்கும் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுவிட்டன. உயர்த்தப்பட்ட வழித்தடங்கள் மற்றும் நிறுத்த நிலையங்களின் கட்டுமானப் பணிகள் 60 சதவிகிதமும், நிலத்தடி நிறுத்த நிலையங்கள் அவற்றுடன் தொடர்புடைய சுரங்கப்பாதைகளின் கட்டுமானப்பணிகள் 20 சதவிகிதமும் 31.3.2012 வரை முடிவுற்றுள்ளன.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் 2013ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து மூன்று நிலைகளில் செயல்பட துவங்கி 2015ஆம் ஆண்டின் இறுதியில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஓ.பன்னீர்செல்வம்
நிதி அமைச்சர்